Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37
கதிர் : 194

புதன்கிழமை
08 ஜூன் 2022

வைகாசி 25 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 16
விலை : ரூ. 50

## லிட்ரோ விநியோகம் நிறுத்தம்

கொழும்பு, ஜூன் 8
லிட்ரோ எரிவாயு விநியோக நிறுவனம் மீண்டும் எரிவாயு விநியோகத்தை 15 ➤



# மிகக் கடினமான காலத்தை எதிர்கொள்ளவுள்ளது நாடு!

### பிரதமர் ரணில் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 8
அடுத்துவரும் மூன்று வாரங்களில் எரிபொருளுக்கும், எரிவாயுவுக்கும் நெருக்கடி நிலவும் சாத்தியங்கள் காணப்படுகின்றன. மக்கள் எரிபொருள் மற்றும் எரிவாயுவை முடிந்தளவு சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.
நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய போதே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்த வேண்டுகோளை 15 ➤

### முச்சந்தி முரளி



"நாட்டில பஞ்சம் வரப்போகுதெண்டு அடிக்கடி சாத்திரம் சொல்லி வெருட்டுற துக்கோ உவர் பிரதமரானவர்?"

# இன்னும் சில மாதங்களில் உணவு நெருக்கடி தீவிரம்!

### உலக உணவுத் திட்டமும், ஐ.நா. விவசாய நிறுவனமும் எச்சரிக்கை

### தடுப்பதற்கான அவசர பரிந்துரைகளும் முன்வைப்பு

**கொழும்பு, ஜூன் 8**

**கடும் உணவுத் தட்டுப்பாடு மற்றும் அதிகரித்துச் செல்லும் விலையேற்றம் காரணமாக எதிர்வரும் மாதங்களில் இலங்கையில் உணவுப் பாதுகாப்பு நிலை மேலும் மோசமடையும் என்று உலக உணவுத் திட்டமும் ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய நிறுவனமும் எச்சரிக்கை விடுத்துள்ளன.** 15 ➤



## கிளி.ம.வியில் குளவிகள் மூர்க்கம்; 25 மாணவர்கள் மருத்துவமனையில்

### குரங்குகளால் வந்த விபரீதம்

கிளிநொச்சி, ஜூன் 8
கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் நேற்று குளவிகள் முற்றுகையிட்டுக் கொட்டியதில் 25 15 ➤



## வீடு உடைத்துத் திருட்டு; சந்தேகநபர் நேற்றுக் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 8
மானிப்பாயில் வீடுடைத்து இலத்திரனியல் உபகரணங்களைத் திருடிய குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் யாழ்ப்பாணம் மாவட்டப் பொலிஸ் புலனாய்வுப் பிரிவால் கைது செய்யப்பட்டுள்ளார்.
கடந்தவாரம் மானிப்பாய் முத்துத்தம்பி வீதியில் புதிதாகக் கட்டப்பட்ட வீடொன்றை உடைத்து அங்கிருந்த சலவை இயந்திரம், வளிச்சீராக்கி (ஏசி), பாதுகாப்புக் கமரா உட்பட 6 லட்சத்து 18 ஆயிரம் ரூபா பெறுமதியான இலத் 15 ➤

## இனந்தெரியாதோரால் குடும்பஸ்தர் கொலை!

### அளம்பிலில் கொடூரம்

முல்லைத்தீவு, ஜூன் 8
முல்லைத்தீவு, அளம்பிலில் ஒருவர் அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார் என்று முல்லைத்தீவுப் பொலிஸார் தெரிவித்தனர்.
செம்மலையைச் சேர்ந்த 41 வயதான ஒருவரே அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார். இவர் இரு பிள்ளைகளின் தந்தை என்று தெரிவிக்கப்பட்டது.
நேற்றுமுன்தினம் இரவு இவரது 12 ➤

## கடன் எல்லையை அதிகரிக்க அனுமதி

கொழும்பு, ஜூன் 8
தேசிய திறைசேரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் நாடாளுமன்றில் 3 ஆயிரம் பில்லியன் ரூபா கடன் எல்லையை ஆயிரம் பில்லியன் ரூபாவால் அதிகரிக்க முன்வைக்கப்பட்ட யோசனை நேற்று விவாதம் இன்றி நிறைவேற்றப்பட்டது. 15 ➤




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16 லட்சம் தொன் அரிசி நாட்டில் தற்போது

கொழும்பு, ஜூன 8
நாட்டில் தற்போது 16 லட்சம் மெற்றிக்தொன் அரிசியே கையிருப்பில் உள்ளது. எனினும் அரிசிக்கான வருடாந்த கேள்வி 24 லட்சம் மெற்றிக் தொன் என்றவாறாக இருப்பதால் 8 லட்சம் மெற்றிக் தொன் அரிசிக்கு நாட்டில் தட்டுப்பாடு நிலவுகின்றது என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.
நாடாளுமன்றில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
எமக்குத் தேவையான உணவின் பெரும்பான்மையானவற்றை நாம் தேசிய ரீதியாக உற்பத்தி செய்கிறோம். எஞ்சிய தொகையை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்கிறோம். ஒரு வருடத்துக்கு எமக்கு 2.4 மில்லியன் மெற்றிக் தொன் அரிசி தேவைப்படுகிறது. ஆனால், 1.6 மில்லியன்



மெற்றிக் தொன் அரிசியே இப்போது எம்மிடம் காணப்படுகிறது.
அரிசி போன்று மரக்கறிகளுக்கும் தட்டுப்பாடு நிலவுகிறது. இதனால், அடுத்த சில மாதங்களுக்குப் பின்னர் நாம் உணவுத்தட்டுப்பாடுக்கு முகம் கொடுக்க நேரிடும். விவசாயத்தை மீண்டும் கட்டியெழுப்ப வேண்டும். தேசிய விவ சாயத்தை கட்டியெழுப்ப இரசாயன உரம் தேவைப்படுகிறது. அத்தோடு, தேயிலை, தென்னை, இறப்பர் பயிர்செய்கைக்காகவும் உரம் தேவைப்படுகிறது. இதற்காக 600 மில்லியன் டொலர் ஒரு வருடத்துக்குத் தேவைப்படுகிறது.
உக்ரைன் - ரஷ்யா மோதலால், அனைத்து நாடுகளின் தேசிய உற்பத்திகளும் அடுத்தாண்டு வீழ்ச்சியடையும் அபாயம் காணப்படுகிறது. 2024 ஆம் ஆண்டாகும்போதே இதனை மீளவும் சீர்செய்ய முடியும் என புள்ளிவிவரங்கள் கூறுகின்றன. நாமும் இதற்கு முகம் கொடுக்க வேண்டியேற்படும் - என்றார். (ம-இ)

# 2019 வரிக்கொள்கை மீண்டும் நடைமுறை!

## நாடாளுமன்றில் நேற்று ரணில் உரை



**கொழும்பு, ஜூன் 8**
**2019 ஆம் ஆண்டுவரை நடைமுறையிலிருந்த வரி விதிப்பு முறைமை இல்லாது செய்யப்பட்டமையாலேயே நாடு கடுமையான பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்தது. ஆதலால், அந்த வரிக்கொள்கை மீண்டும் நடைமுறைப்படுத்தப்படும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**

நாடாளுமன்றில் நேற்று நாட்டின் பொருளாதார நிலவரம் தொடர்பாக விசேட உரையொன்றை ஆற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
2019ஆம் ஆண்டு, நாம் நடைமுறைப்படுத்திய வரி முறையை இந்த அரசாங்கம் இல்லாது செய்தமையால், 600 - 800 பில்லியன் ரூபா வருமான இழப்பு அரசாங்கத்துக்கு ஏற்பட்டது. எமது பொருளாதாரத்தின் வீழ்ச்சி அங்குதான் ஆரம்பமானது. எனவே, நாம் மீண்டும் அந்த வரிவிதிப்புக்களை நடைமுறைப்படுத்த வேண்டிய நிலைமையில் உள்ளோம். நாட்டை பலப்படுத்த அரசாங்கத்துக்கு வருமானம் வரவேண்டும். வருமானம் உறுதிப்படுத்தப்பட்டாலேயே பொருளாதாரம் மேம்படும்-என்றார். (ம)

*மே 9 கலவரம்*

# அரசியல்வாதிகளின் சொத்திழப்புகளுக்கு இழப்பீடு வழங்குவதற்கு தடை விதிக்குக

## ம.உ. ஆணைக்குழுவில் முறைப்பாடு நீதிமன்றத்தை நாடுவதற்கும் முடிவு



கொழும்பு, ஜூன் 8
மே மாதம் 9ஆம் திகதி நாடங்கிலும் ஏற்பட்ட கலவரங்களில், அரசியல்வாதிகளின் சொத்துக்கள் தீக்கிரையாக்கப்பட்டமை மற்றும் அழிக்கப்பட்டமைக்காக அவர்களுக்கு இழப்பீடு வழங்குவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில் அந்த நடவடிக்கையை தடுத்து நிறுத்தவேண்டும் என்று பம்பலப்பிட்டியில் உள்ள மனித உரிமை ஆணைக்குழுவில் சிவில் அமைப்பொன்றால் அடிப்படை உரிமை மீறல் வழக்கு பதியப்பட்டுள்ளது.
சிவில் அமைப்புக்களின் பிரநிதிகளான ஹில்மி அஹமட், திருமதி சிராணி ஜெயவர்த்தன. மொஹமட் பிஸ்ரி கஸ்சாலி, திருமதி தஸ்லீமா தஹலான், மற்றும் சாம் நவாஸ் ஆகியோர் இணைந்து சிரேஸ்ட சட்டத்தரணி சிராஸ் மூலம் இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளனர்.
கடந்த மே மாதம் 9 ஆம் திகதி காலிமுகத்திடல் வன்முறையின்போது அரசியல்வாதிகளின் வீடுகள் மற்றும் இதர சொத்துக்கள் அரச எதிர்ப்பாளர்களால் அழிக்கப்பட்டன. இதையடுத்து அழிக்கப்பட்ட அந்தச் சொத்துக்களுக்கு இழப்பீடு வழங்குவதற்கு வீடமைப்பு நகர அபிவிருத்தி அமைச்சர் பிரசன்ன ரணதுங்க நடவடிக்கை எடுத்துள்ளார். இந்த நடவடிக்கைகளை உடன் நிறுத்தவேண்டும் என்று மேற்படி சிவில் அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது. இரண்டு வாரத்துக்குள் இந்த வழக்கை உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதற்கும் அந்த அமைப்பு நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.
கடந்த காலங்களில் அளுத்கம, ஜின்தோட்ட, அம்பாறை, திகணை, மினுவாங்கொடை போன்ற இடங்களில் வன்முறையால் பாதிக்கப்பட்ட மக்களின் சொத்துக்களுக்கு இதுவரை எந்த இழப்பீடும் வழங்கப்படாத நிலையில் அரசியல் வாதிகளுக்கு எவ்வாறு இழப்பீடு வழங்கமுடியும்? என்று அந்த அமைப்பு கேள்வி எழுப்பியுள்ளது. (ம)

## அடுத்த ஒரு வருடத்துக்கு

# ஊதியமின்றி பணியாற்ற அமைச்சர்கள் தீர்மானம்!



கொழும்பு, ஜூன் 8
நாடு எதிர்நோக்கும் கடுமையான பொருளாதார நெருக்கடி காரணமாக அடுத்த ஒரு வருடத்துக்கு சம்பளமின்றிப் பணியாற்ற அமைச்சரவை அமைச்சர்கள் தீர்மானித்துள்ளனர்.
நேற்றுமுன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.
இது தொடர்பாக பிரதமரினால் முன்வைக்கப்பட்ட அமைச்சரவைப் பிரேரணைக்கு அனைத்து அமைச்சர்களும் இணக்கம் தெரிவித்தனர் என்று அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
'நாட்டுக்குத் தினசரி வருமானம் 4 பில்லியன் ரூபா, தினசரி செலவு 9.6 பில்லியன் ரூபா ஆகும். எனவே, தினமும் சில பில்லியன் ரூபா வருவாயை சுமக்கவேண்டிய பெரும் நிதி நெருக்கடியில் இந்த சிறிய அமைச்சரவை நியமிக்கப்பட்டுள்ளது.
இந்த நிலையில், ஒரு வருட காலம் சம்பளமின்றி பணியாற்றும் அமைச்சரவைப் பத்திரத்தை பிரதமர் சமர்ப்பித்தார். இதற்கு அனைத்து அமைச்சர்களும் சம்மதித்துள்ளனர் - என்றார். (ம)

# உரத்துக்காக இந்தியா 55 மில். டொலர் கடன்

கொழும்பு, ஜூன் 8
பெரும்போக செய்கைக்கான உரத்தைக் கொள்வனவு செய்வதற்கு இந்தியாவிடம் இருந்து 55 மில்லியன் டொலர் கிடைக்கவுள்ளது.
இந்திய ஏற்றுமதி, இறக்குமதி வங்கியிடம் இருந்து இந்தக் கடனைப் பெறுவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்து.
இதன்படி, குறித்த கடன் தொகையை பயன்படுத்தி 2022/23 பெரும்போக செய்கைக்கு தேவையான உரம் இறக்குமதி செய்யப்படும். அதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ம)

# ரூபா வீழ்ச்சியை கட்டுப்படுத்த எடுத்த நடவடிக்கைகள் வெற்றி

## இலங்கை மத்திய வங்கி தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 8
நாணய மாற்று விகிதங்களை மாற்றியமைக்கும் தீர்மானத்தை தொடர்ந்து ரூபாவின் வீழ்சியை கட்டுப்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் வெற்றியடைந்துள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
இலங்கை மத்திய வங்கி இது தொடர்பான அறிவித்தலை விடுத்துள்ளது. இந்த நிலைமை சர்வதேச நாணய நிதியத்துடன் பணியாளர் மட்ட உடன்படிக்கையை எட்டுவதற்கான முன்னேற்றத்துக்கும் வழிவகுத்துள்ளது என்று மத்திய வங்கி தெரிவித்துள்ளது.
இந்த ஆண்டு மார்ச் முதல் வாரத்தில், ரூபாயின் நெகிழ்வுத் தன்மை, 'நெகிழ்வான மாற்று விகிதத்தை' கடுமையாக வீழ்ச்சியடையச் செய்தது என்று இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பௌத்த கொள்கையே அரசாங்கத்தின் கவசம்!

## கோத்தாபய தரப்புக்கு கல்கந்தே தேரர் சாட்டை



**கொழும்பு, ஜூன் 8**

**இந்த அரசாங்கம் சிங்கள- பௌத்த கொள்கையை தனது நலனுக்காக கவசமாகப் பயன்படுத்தியுள்ளது என பௌத்த கற்கைநெறிகளுக்கான வல்பொல ராகுல நிறுவகத்தின் தலைவர் கல்கந்தே தம்மானந்த தேரர் தெரிவித்துள்ளார்.**

அண்மையில் ஊடகங்களுக்கு வழங்கிய செவ்வியில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போதைய அரசாங்கம் பௌத்த குருமார்களை காடையர் போன்று உருவாக ஊக்குவித்துள்ளது. இதனால் பல்வேறு இடங்களில் அவர்களைப் பயன்படுத்தியது. நீதி இல்லாத நாட்டில் தற்போது பயங்கரவாதம் உருவாகியுள்ளது. பொறுப்புக்கூறல் அரசமைப்பிலோ அல்லது நீதித்துறையிலோ உள்வாங்கப்படவில்லை.

நல்லிணக்கம் என்பது அறிக்கைகளை வெளியிட்டு டொலரை பெற்றுக்கொள்வதில்லை. சமூகத்தின் காயங்களை ஆற்றாமல் விட்டமையால் தற்போது குடும்ப வன்முறை துன்புறுத்தல்கள், சிறுவர் துஷ்பிரயோகங்கள் நிகழ்ந்தேறுகின்றன. சிங்கள பௌத்தர்களை தனியான குழுவாகவும் ஏனைய சமூகத்தினரை எதிரிகளாகவும் சித்திரித்து பௌத்த கவசத்தை தனது நலனுக்காக அரசாங்கம் பயன்படுத்தியுள்ளது -என்றார்.

(ச-இ)

## அமெரிக்க நிறுவனத்துக்கு 65 மில். டொலர் விவகாரம்

# அஜித் நிவாட் கப்ராலுக்கு ரூ.10 மில். சரீரப் பிணை

கொழும்பு, ஜூன் 8

2014ஆம் ஆண்டு அமெரிக்க நிறுவனத்துக்கு 6.5 மில்லியன் அமெரிக்க டொலர் வழங்கப்பட்ட விவகாரம் தொடர்பான வழக்கில், மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால், 10 மில்லியன் ரூபா சரீரப் பிணையில் கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றால் விடுவிக்கப்பட்டுள்ளார்.

தினியாவல பாலித தேரர் செய்த முறைப்பாடு தொடர்பான விசாரணையின் போதே கொழும்பு கோட்டை நீதிவான் திலின கமகே இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

மேலும் இந்த வழக்கில் திருத்தப்பட்ட முறைப்பாட்டைத் தாக்கல் செய்வதற்கும் தினியாவல பாலித தேரருக்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது. அமைச்சரவையின் அனுமதியின்றி இவ்வாறு பெரிய தொகை செலுத்தப்பட்டுள்ளமை மிகவும் பாரதூரமான குற்றம் என முறைப்பாட்டாளர் தினியாவல பாலித தேரர் குறிப்பிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி சந்திக்கு அருகாமையில் 15 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- ✓ A-9 வீதியில் இருந்து இரண்டாவது காணி 100M தூரம்.
- ✓ கைதடி வழி பிள்ளையார் கோயிலில் இருந்து 100M மீற்றர் தூரம்.
- ✓ குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி. ✓ நன்னீரூற்று
- ✓ கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம் 300 M தூரம்
- ✓ மூன்று வழிப் பாதை மேட்டு நிலம் கைதடி சந்தி 500 M தூரம்
- ✓ 2 1/2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்
- ✓ 1 பரப்பின் விலை 3 லட்சம்
- ✓ பார்வையிடும் நேரம் காலை 8 மணிமுதல் மாலை 6 வரை.

தொடர்பு: 076 658 3621
076 436 5814

## புலி முத்திரை குத்தப்பட்டு

# புலம்பெயர் தமிழர்களின் முதலீடுகள் முடக்கப்படும்

## செல்வம் எம்.பி. எச்சரிக்கை

வவுனியா, ஜூன் 8

புலம்பெயர் தமிழர்கள் இலங்கையில் முதலிட்டால், விடுதலைப்புலிகள் என்ற முத்திரை குத்தப்பட்டு அவற்றை இந்த அரசு முடக்கும் என்று தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினரான செல்வம் அடைக்கலநாதன். வவுனியாவில் அமைந்துள்ள ரெலோ கட்சியின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

21ஆவது திருத்தம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தேசியத்தின்பால் செயற்படுகின்ற கட்சிகளின் தலைவர்களை அழைத்து விவாதித்து வருகின்றோம். கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துடன் விரைவில் பேசவிருக்கின்றோம். ஒட்டுமொத்த தமிழ்பேசும் மக்களுடைய குரலாக 21ஆவது திருத்தத்தில் எமது மக்களின் கோரிக்கைகளை எவ்வாறு உள்ளடக்குவது என்பது மிகமிக முக்கியமானதாகும்.

21ஆவது திருத்தச்சட்டம் நாடாளுமன்றத்தில் வருவதற்கு முன்னராக அமைச்சரவையிலே சமர்ப்பிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்ற விவாதத்துக்கு வருவதற்கு முன்னர் எங்களுடைய ஒருமித்த கருத்தைச் சொல்கின்ற வாய்ப்பை உருவாக்க வேண்டும். இன்றைய சூழலில் புலம்பெயர் உறவுகளிடம் பணம் கோருவதும் அவர்களின் முதலீடுகளை எதிர்பார்ப்பதும் சந்தர்ப்பத்துக்காக அவர்களைப் பயன்படுத்தும் செயலே. பயங்கரவாத முத்திரை புலம்பெயர் தமிழர்கள் பலருக்கும் பல அமைப்புகளுக்கும் குத்தப்பட்டுள்ள நிலையில் எவ்வாறு அவர்கள் முதலிட முன் வருவார்கள். அவ்வாறு முதலிட்டால் அந்த முதலீடுகளை பயங்கரவாத முத்திரையைக் குத்தி முடக்கப்படும் நிலையை ஆட்சியாளர்கள் செய்யமாட்டார்கள் என்பதற்கு உத்தரவாதம் இல்லை. ஆகவே புலம்பெயர் தமிழர்கள் மீதான தடைகளை இந்த அரசாங்கம் நீக்க வேண்டும் -என்றார்.

(ம-110)

## புதினம் தெரியுமோ?

**யாழ்ப்பாண பெரியாஸ்பத்திரியில இப்ப நடக்கிற ஒரு விசயத்தை கட்டாயம் சொல்லத்தான் வேணும். எங்கேயோ தூரங்களில இருந்தெல்லாம், வருத்தத்தை டொக்டரிட்டை காட்டி மருந்தெடுக்கிறதுக்கு பெரியாஸ்பத்திரிக்கு ஒவ்வொருநாளும், இந்தப் பெற்றோல் விலையிலையும் சனங்கள் வந்து கொண்டுதான் இருக்குது. இப்பிடி வாற சனங்கள், போனவுடன் ஒரு வரிசையில நிண்டு துண்டு எடுக்கவேணும். பிறகு ஒவ்வொரு கிளினிக்கிலையும் இருக்கிற வாங்குகள், கதிரையள் எண்டு வரிசை கட்டி அதுவும் பத்தாமல்போக, கால்கடுக்க கியூவில நிக்கவேணும். அதுக்குப் பிறகு டொக்டர் பார்த்து மருந்து எழுதிக் குடுக்க, அந்த மருந்துத் துண்டோட இன்னொருக்கா வரிசையில மணித்தியாலக் கணக்கில நிண்டு மருந்தெடுக்கவேணும். இப்பிடி எல்லாம் செய்து முடிய ஒருநாள் கழிஞ்சிடும்.**

**'இது வழக்கமான நடைமுறைதானே?' எண்டு சிலர் கேப்பியள். உண்மைதான். இலவசமா மருத்துவம் பார்த்து, மருந்தும் எடுக்கிறதெண்டால் சிலபல சிக்கல்களை தாங்கத்தான் வேணும். எல்லாத்துக்கும் நொட்டை சொல்லிக் கொண்டிருக்க ஏலாது தான். ஆனாலும் சில சங்கடங்களை இல்லாமல் செய்யலாமெண்டால், அதுகளைச் சொல்லிக் காட்டத்தானே வேணும்?**

**இப்ப நாட்டில மருந்துகளுக்கு பெரும் தட்டுப்பாடு. பார்மஸியளிலையும் இல்லை. அங்க இருக்கிற மருந்துகளும் கடும் விலை. இப்பிடிப்பட்ட நிலையில பெரியாஸ்பத்திரிக்கு கிளினிக்குக்குப் போறவை, மருந்தெடுக்க ரண்டு மூண்டு மணித்தியாலம் கியூவில நிண்டு, மருந்து எடுக்கிற இடத்துக்குப் போய், டொக்டர் எழுதிக் குடுத்த துண்டைக் குடுத்தால், அதை அவை வாங்கிப் பாத்திட்டு 'இந்த மருந்து ஸ்ரொக் இல்லை. நீங்கள் வெளி யால பார்மஸியளில வாங்கிப் போடுங்கோ' எண்டு சொன்னால் எப்பிடியிருக்கும்? பார் மஸியளில வாங்கிப் போடுங்கோ எண்ட சொல்லைக் கேக்கவோ, அவை வருத்தத் தோடையும் இவ்வளவு நேரம் வரிசையில நிண்டவை? அப்பிடி மருந்து இல்லை யெண்டா அதுகளை முதலே சொல்லுற ஏற் பாட்டைச் செய்திருந்தா அவை இப்பிடி வீணா வரிசையில நிண்டு அலைக்கழியத் தேவையில்லையே. அப்பிடி நிண்ட நேரத் துக்கு அவை பார்மஸியில மருந்தை வாங் கிக் கொண்டு. வீட்டை போய்ச் சேர்ந்திருப் பினமே.**

**என்னென்ன மருந்து இருக்கு? என்னென்ன மருந்து இல்லையெண்டதை டொக்டர் மாருக்கு ஆஸ்பத்திரி நிர்வாகம் சொன்னால், அவை துண்டெழுதேக்க அதை வருத்தக்காரருக்குச் சொல்லிவிட்டால், அவை வரிசையில நிக்காமால் நேர பார்மஸிக்கே போடுவினமே. சிலபேர் ஒரு மருந்துக்காக இப்பிடி வரிசையில நிண்டு, பிறகு 'மருந்தில்லை' எண்டு திரும்பிப் போயிருக்கினம். ஆஸ்பத்திரிக்கு பொறுப்பானவை இந்த விசயத்தைக் கொஞ்சம் கவனத்தில எடுப்பினமோ?**



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடுமுழுவதும் படைக்குவிப்பு!

## ஜனாதிபதி உத்தரவு: நாடாளுமன்றில் தகவல்



**கொழும்பு, ஜூன் 8**
**நாடுமுழுவதும் ஆயுதம் தாங்கிய படையினரைக் கடமையில் ஈடுபடுத்துமாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச உத்தரவிட்டுள்ளார்.**

பொதுப்பாதுகாப்புச் சட்டத்தின் 12ஆவது பிரிவின் 40ஆவது அதிகாரத்துக்கு அமைவாகவே ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார். ஜனாதிபதியினால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு தொடர்பாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நேற்று செவ்வாய்க்கிழமை காலை நாடாளுமன்றத்துக்கு அறிவித்தார்.
நாட்டில் அண்மைக்காலமாக துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களும், கடத்தல்களும் தீவிரமாக இடம்பெறும் நிலையில், பாதுகாப்புத் தரப்பு மீது பலரும் கடும் விமர்சனங்களை முன்வைத்தனர். எதிர்க்கட்சித் தலைவரான சஜித், நாட்டின் தேசியப் பாதுகாப்பு தற்போது கேள்விக்கு உட்பட்டுள்ளது.
முக்கியமான குற்றவாளிகளுக்கு எதிரான சாட்சிகளே கொல்லப்படுகின்றனர் என்று வெளிப்படையாகவே விமர்சித்தார். இந்தப் பின்னணியிலேயே நாட்டின் பல பகுதிகளிலும் ஆயுதம் தாங்கிய படையினரை கடமையில் ஈடுபடுத்துமாறு உத்தரவிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## போராட்டங்கள் ஒருபோதும் பிரச்சினைக்குத் தீர்வல்ல!

### ரோஹித அபேகுணவர்த்தன எம்.பி. தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 8
போராட்டங்களை மேற்கொண்டு பிரச்சினைகளுக்கு ஒருபோதும் தீர்வைக் காணமுடியாது என்று ஆளும் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினரான ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்தார்.
நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற சபை ஒத்திவைப்பு பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
நாம் இன்று கடுமையான நெருக்கடிக்கு முகம் கொடுத்து வருகிறோம். நாடாளுமன்றின் ஊடாக இவற்றுக்கெல்லாம் தீர்வொன்று கிடைக்குமா? என மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.
எரிபொருள் பிரச்சினை, எரிவாயு பிரச்சினை, டொலர் பிரச்சினை என நாட்டில் பல பொருளாதாரப் பிரச்சினைகள் காணப்படுகின்றன. பொருளாதாரப் பிரச்சினையுடன் அரசியல் பிரச்சினையும் தற்போது ஏற்பட்டுள்ளது.
அத்தியாவசியப் பொருள்களின் விலை உச்சத்தைத் தொட்டுள்ளன. இவ்வாறே விலை உயர்ந்துக் கொண்டுசென்றால், இது எங்கே சென்று முடியும்? இந்தப் பிரச்சினைக்கு ஓர் இரவில் தீர்வைக் காணமுடியாது. இப்படியே சென்றால் மக்களால் வாழமுடியாத நிலைமை ஏற்பட்டுவிடும். போராட்டங்களை நடத்தி என்ன பயன் கிடைத்தது? இதனால் நாட்டுக்கு எரிபொருள் வந்தால், எரிவாயு வந்தால், மின்சாரப் பிரச்சினைக்குத் தீர்வுக்கிடைத்தால் நாமும் ஒத்துழைப்பை வழங்குவோம். போராட்டங்கள் எதற்கும் தீர்வாக அமையாது - என்றார். (ம)



## ஈஸ்டர் தாக்குதல்

# கைதான 51 பேருக்கு விளக்கமறியல் நீடிப்பு

கொழும்பு, ஜூன் 8
உயிர்த்த ஞாயிறுதின பிரதான தாக்குதல்தாரியான சஹ்ரானின் பயிற்சி முகாமில் பயற்சி பெற்றனர், அவருடன் நெருங்கிய தொடர்பைப் பேணினர் என்ற சந்தேகத்தில் கைதுசெய்யப்பட்ட 51 பேரையும் எதிர்வரும் 21ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.
மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றதில் நீதிவான் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது. நாட்டில் பல்வேறு சிறைச்சாலைகளில் உள்ளவர்களைத் தற்போதைய நாட்டின் சூழ்நிலை காரணமாக அழைத்துவர முடியாத நிலையில், மட்டக்களப்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் மட்டுமே பாதுகாப்புடன் அழைத்துவரப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.
இதையடுத்தே அவர்கள் 51 பேரும் எதிர்வரும் 21ஆம் திகதி வரை மறியலில் வைக்கப்பட்டனர். (ம)

# வீதிகளை மூடுபவர்களை பொலிஸார் 'கவனிக்கவும்'

### சரத் வீரசேகர எம்.பி.தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 8
பொதுமக்களின் இயல்பு வாழ்க்கைக்கு இடையூறு விளைவிக்கும் வகையில், வீதிகளை மூடிப் போராட்டங்களில் ஈடுபடும் நபர்களைப் பொலிஸார் கவனிக்க வேண்டும் என்று சிறிலங்கா பொது ஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத்வீரசேகர தெரிவித்துள்ளார்.
ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத்தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொள்ள பொதுமக்கள் தனிப்பட்ட ரீதியில் அரசாங்கத்துக்கு உதவவேண்டும். இதேவேளை நாட்டில் அண்மையில் பல துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன. நாடு முழுவதும் நடத்தப்படும் போராட்டங்களுக்கு பொலிஸார் பாதுகாப்பு வழங்குவதுடன் அமைதியின்மை ஏற்படுவதைத் தடுப்பதற்கு அவர்கள் பெரும்பாலான நேரங்களை செலவிடுகின்றனர்.
இவ்வாறான தொடர்ச்சியான போராட்டங்கள் மற்றும் நாசவேலைகளால் பொலிஸார் பலவீனமடைந்துள்ளதால் அவர்களை நான் குற்றம்சொல்லமாட்டேன். எனினும் மக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் வீதிகளை மூடுபவர்களை பொலிஸார் கவனிக்க வேண்டும்-என்றார். (ம-14,இ)

# முன்னாள் விவசாய அமைச்சர் நாட்டை தவறாக வழிநடத்தினார்

### சஜித் குற்றச்சாட்டு



கொழும்பு, ஜூன் 8
முன்னாள் விவசாய அமைச்சர் நாடாளுமன்றத்தையும் நாட்டையும் தவறாக வழி நடத்தினார் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சுமத்தியுள்ளார்.
நாடாளுமன்றத்தில் நேற்று கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:
கடந்த பருவத்தில் விவசாய உற்பத்தியில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டது.
இவ்வாறு ஏற்பட்ட வீழ்ச்சி 10 வீதமானது என்று விவசாய அமைச்சர் தெரிவித்தார்.
ஆனால், சுமார் 50 வீதமான வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. முன்னாள் விவசாய அமைச்சர் நாடாளுமன்றத்தையும் நாட்டையும் தவறாக வழி நடத்தினார். விவசாயிகளுக்கு வழங்கப்படும் இழப்பீடு குறித்து தற்போதைய அரசாங்கம் தெளிவுபடுத்த வேண்டும் - என்றார். (ம)

## சு.க.வினது பதவிகளில் இருந்து நிமல் சிறிபாலவை நீக்கத் தடை

கொழும்பு, ஜூன் 8
சுதந்திரக் கட்சியின் பதவிகளில் இருந்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவை நீக்குவதற்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.
நிமல் சிறிபால டி சில்வா தாக்கல் செய்த மனுவை பரிசீலித்த கொழும்பு மாவட்ட நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது. மேலும் இந்தத் தடை உத்தரவு வரும் 20ஆம் திகதி வரை நடைமுறையில் இருக்கும் என்றும் அந்த உத்தரவில் கூறப்பட்டுள்ளது. (ம)

# துறைமுக நகர முதலீடுக்கு 40 வருடங்கள் வரிச்சலுகை

கொழும்பு, ஜூன் 8
கொழும்பு துறைமுக நகரத்தில் முதலீடு செய்யும் முதலீட்டாளர்களுக்கு 40 வருடங்கள்வரை வரிச் சலுகை வழங்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.
நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சர் பந்துல குணவர்த்தன இந்தத் தகவலைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
முதலீட்டாளர்களைக் கவரும் வகையில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. கொழும்பு துறைமுக நகரத்துக்குப் பெறப்பட்ட வெளிநாட்டு முதலீடு ஒரு பில்லியன் டொலர் என்பதுடன், இலங்கையில் ஒரு திட்டத்துக்காகப் பெறப்பட்ட அதிகூடிய வெளிநாட்டு முதலீடு இதுவென்பது குறிப்பிடத்தக்கது - என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடற்படைக்கு காணி சுவீகரிப்பு மக்களின் எதிர்ப்பால் நிறுத்தம்

முல்லைத்தீவு, ஜூன் 8

வட்டுவாகல் கோத்தபாய கடற்படை முகாமுக்காக பொதுமக்களின் காணிகளை சுவீகரிக்கும் நடவடிக்கைகள் நேற்று இடம்பெற்ற நிலையில், மக்களின் கடும் எதிர்ப்பால் அந்த முயற்சிகள் கைவிடப்பட்டன.



முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள கோத்தாபய கடற்படை முகாமுக்கு பொதுமக்களின் காணிகளை நிரந்தரமாகச் சுவீகரிக்கும் நடவடிக்கைகள் கடந்த சிலகாலமாக இடம் பெற்று வருகின்றன. குறித்த கடற்படை முகாமுக்காக சுமார் 617 ஏக்கர் நிலப்பரப்புடைய பொதுமக்களின் காணிகள் அவ்வாறு சுவீகரிக்கப்பட திட்டமிடப்பட்டுள்ளன.

இந்தக் காணிச் சுவீகரிப்புக்காக நில அளவைத் திணைக்களத்தினர் நகர்வுகளை முன்னெடுப்பதும் பின்னர் மக்களின் எதிர்ப்பால் அது கைவிடப்படுவதும் தொடர்கதையாகி வருகின்றது. இந்த நிலையில், நேற்றும் பொதுமக்களின் காணிகளை அளவீடு செய்து அபகரிப்பதற்கு நில அளவைத் திணைக்களத்தினர் நடவடிக்கையை முன்னெடுத்தனர். இதையடுத்து பலநூறு பொதுமக்கள் திரண்டு எதிர்ப்பை வெளிப்படுத்தியதை அடுத்து காணி சுவீகரிப்பு நடவடிக்கைகள் மீண்டும் கைவிடப்பட்டன.

நில அளவீட்டுப் பணிகளுக்கு எதிர்ப்பை தெரிவித்து மக்கள் போராட்டம் மேற்கொண்டபோது அந்தப்பகுதியில் கடமையிலிருந்த பொலிஸார் பொதுமக்களும் முரண்பட்டனர். அத்துடன் புலனாய்வாளர்களும் கடற்படையினரும் போராட்டத்தில் ஈடுபட்ட பொது மக்களை ஒளிப்படம் எடுத்தும் அச்சுறுத்தினர்.

இந்த எதிர்ப்புப் போராட்டத்தில் காணி உரிமையாளர்களுடன் வடமாகாண முன்னாள் விவசாய அமைச்சர் க.சிவநேசன், வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் து.ரவிகரன், கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர்களான சி.லோகேஸ்வரன், க.தவராசா, வலி. வடக்கு பிரதேசசபை உறுப்பினரும் வலிகாமம் வடக்கு மீள்குடியேற்ற குழுத் தலைவருமான ச.சஜீவன் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (ம-19)



## சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு சாட்டி கடற்கரையில் தூய்மைப்பணி

யாழ்ப்பாணம், ஜூன் 8

யாழ். கரித்தாஸ் -கியூடெக் நிறுவன இயக்குநர் இயூஜின் பிரான்சிஸ் அடிகளார் தலைமையில் உலக சுற்றுச்சூழல் தினம் வேலணை - சாட்டி கடற்கரையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை கடைப்பிடிக்கப்பட்டது. மேற்குறித்த நிகழ்வின் ஒருபகுதியாக கடற்கரை சுத்தப்படுத்தலும் மரநடுகையும் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் இளவாலை, நாவற்குழி, பூம்புகார், பொம்மைவெளி, நாவாந்துறை மூர் வீதி, சாட்டி, அல்லைப்பிட்டி, வேலணை பகுதியிலிருந்து சமூகத்தலைவர்கள், சமூக குழுக்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோரும் கலந்துகொண்டனர். (ம-ய)



## எரிவாயுவை வழங்கக்கோரி வீதியை மறித்து போராட்டம்

கொழும்பு, ஜூன் 8

சமையல் எரிவாயுயை பெற்றுத்தருமாறுகோரி கொழும்பு முகத்துவாரம் அளுத்மாவத்தை வீதியை மறித்து மக்கள் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மக்கள், எரிவாயு சிலிண்டர்களை வீதிக்கு குறுக்காக நீண்ட வரிசையாக அடுக்கி வைத்து போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

நாட்டில் எரிவாயு தட்டுப்பாடு நிலவிவரும் நிலையில் கடந்த வாரம் எரிவாயு விநியோகிக்கப்பட்டு பின்பு நிறுத்தி வைக்கப்பட்டது. இந்த நிலையில் எரிவாயுவை பெற்றுத்தருமாறுகோரி பல இடங்களில் மக்கள் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

20 வயதுக்கு மேற்பட்டோருக்கு

## நான்காவது தடுப்பூசி பணி நேற்று ஆரம்பம்

கொழும்பு, ஜூன் 8



20 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் கொரோனாத் தொற்றின் நான்காவது தடுப்பூசி ஏற்றும் பணிகள் கொழும்பில் நேற்று ஆரம்பமாகின. தகுதியுடைய அனைவரும் நான்காவது தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளுமாறு கொழும்பு பிராந்திய தொற்றுநோய் நிபுணர் மருத்துவர் டினு குருகே தெரிவித்துள்ளார்.

அத்துடன் மூன்றாவது தடுப்பூசி பெற்று மூன்று மாதங்கள் நிறைவுபெற்றால் மட்டுமே நான்காவது தடுப்பூசியைப் பெறவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும் கொரோனாத் தொற்றின் நான்காவது தடுப்பூசி 20 முதல் 60 வயதுக்குட்பட்டவர்களுக்கும் நோயெதிர்ப்புக் குறைபாடு மற்றும் நாட்பட்ட நோய் உள்ளவர்களுக்கும் பரிந்துரைக்கப்படுவதாக சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது. (ம-14,இ)

## விறகு தேடச்சென்ற 2 யுவதிகள் மாயம்

கொழும்பு, ஜூன் 8

விறகு தேடச்சென்ற இரண்டு யுவதிகளை கடந்த 6 நாள்களாகக் காணவில்லை என அக்கரப்பத்தனை பொலிஸ் நிலையத்தில் முறைபாடு செய்யப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அக்கரப்பத்தனை சென்மார்கட் தோட்டத்தில் வசிக்கும் சிவக்குமார் ரூபிகா (வயது -15), சிவலிங்கம் ஸ்ரீதேவி (வயது - 18) ஆகிய இரண்டு யுவதிகளே இவ்வாறு காணாமற் போயுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 2ஆம் திகதி முற்பகல் 11 மணியளவில் வீட்டில் இருந்து விறகு சேர்க்கச் சென்றவர்கள் மீண்டும் வீடு திரும்பாத நிலையில், அவர்களைத் தேடும் பணியில் பொலிஸார் மற்றும் அதிகாரிகள் தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றனர். (ம)



யாழ்ப்பாணம் - சண்டிலிப்பாய் ஆலங்குளம் கலைவாணி முன்பள்ளி மாணவர்களின் மகிழ்களம் (விளையாட்டு விழா) அண்மையில் முன்பள்ளி மைதானத்தில் நிலையத் தலைவர் சி. சுதர்சன் தலைமையில் இடம்பெற்றது. (ய-63)

## சட்டவிரோத மணல் அகழ்வு: கைதானோருக்குப் பிணை

கிளிநொச்சி, ஜூன் 8



தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புளியம்பொக்கணைப் பகுதியில் நேற்றுமுன்தினம் அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட சாரதிகள் இருவரும் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களின் கட்டுப்பாட்டில் இருந்த இரண்டு டிப்பர்கள் பொலிஸாரின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு செல்லப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. (ச-113)

## கூரிய ஆயுதங்களால் 2 ஆண்கள் கொலை

கொழும்பு, ஜூன் 8

அநுராதபுரம், எப்பாவலப் பகுதியில் ஆண்கள் இருவர் கூரிய ஆயுதங்களால் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அநுராதபுரம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். நாட்டில் கடந்த சில தினங்களாக துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களும், படுகொலைகளும் அதிகரித்து வருகின்றன. இந்தப் பின்னணியிலேயே அநுராதபுரத்தில் இந்த இரட்டைக் கொலை இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-14,இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அதிபரை நியமிக்குமாறு மாணவர்கள் போராட்டம்

முல்லைத்தீவு, ஜூன் 8

விசுவமடு விஸ்வநாதன் ஆரம்பப் பாடசாலைக்கு அதிபர் ஒருவரை நியமிக்குமாறு கோரி மாணவர்கள் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த பாடசாலை சுமார் ஒரு வருடத்துக்கும் மேலாக அதிபர் இல்லாமல் இயங்கி வருகின்றது. இந்தப் பாடசாலையில் சுமார் 375 மாணவர்கள் கற்றநிலையில் தற்போது அந்த எண்ணிக்கை 300 என்றவாறாகக் குறைந்துள்ளது. இந்தப் பின்னணியிலேயே மாணவர்கள் மேற்படி போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இது தொடர்பில் மாணவர்கள் தெரிவித்ததாவது:

நீண்ட காலமாக எமது பாடசாலை அதிபர் இல்லாமல் இயங்கி வருகின்றது. இதனால் எமது கற்றல் நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் சிரமமாக உள்ளது. எமது பிரச்சினைகளை அடுத்த கட்டத்துக்குக் கொண்டுசென்று தீர்த்து வைப்பதற்கும் எமது கல்வி மேம்பாட்டுக்கும் அதிபர் ஒருவர் தேவை. எனவே உரிய அதிகாரிகள் எமக்கு அதிபர் ஒருவரை நியமிக்க வேண்டும் -என்றனர். (ம-14-113)

## நயினாதீவு ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம்

யாழ்ப்பாணம், ஜூன் 8

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 29ஆம் திகதி புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 16 தினங்கள் நடைபெறவுள்ள மஹோற்சவத்தில் எதிர்வரும் ஜூலை மாதம் 3ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பகல் குடைத் திருவிழாவும் இரவு முத்துச்சப்பரமும் 11ஆம் திகதி திங்கட்கிழமை சப்பரத் திருவிழாவும் 12ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும் 13ஆம் திகதி புதன்கிழமை தீர்த்தத் திருவிழாவும் கொடியிறக்கமும் 14ஆம் திகதி வியாழக்கிழமை பூங்காவனமும் இடம்பெறும் என்று ஆலய அறங்காவலர் சபை அறிவித்துள்ளது. (ம-14)

## கிராமவலப் பிரவேசமும் சிறப்புச்சொற்பொழிவும்

வரணி - மாசேரி புராதன குருநாதர் சுவாமி கோயில் வருடாந்த மணவாளக்கோலத் திருவிழாவை முன்னிட்டு, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் கிராம வலப் பிரவேசமும் சிறப்புச்சொற்பொழிவும் வரணி மாசேரி விக்கிரமாகுளப் பிள்ளையார் கோயிலில் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை இரவு 8 மணிக்கு இடம்பெறவுள்ளது.

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் தலைவர் சி.கா.கமலநாதன் தலைமையில் இதன் ஆரம்ப நிகழ்வாக குருநாதர் கோயிலில் காலை 7 மணி தொடக்கம் சங்காபிஷேக விஷேட பூசை, திருவூஞ்சல் இடம்பெற்று மாலை 5 மணிக்குக் குருநாதர் சுவாமி, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் திருமுறை சகிதம் கிராமப்பிரவேசம் இடம்பெறும். அத்துடன் சிறப்புச்சொற்பொழிவை 'நாவலர் பாரம்பரியத்தில் திருவுலாவில் திருமுறை பாடுவோம்' என்ற கருப்பொருளில் சைவப்புலவர் பிரசங்கபூஷணம் செ.கந்தசத்தியதாசன் ஆற்றவுள்ளார்.

அதனைத்தொடர்ந்து சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. இறுதியாக வரணியூர் சைவப்புலவர் கா.கமலநாதன் வழங்கும் 'சண்டேஸ்வரர் நாயனார்' சிறப்பு வில்லிசையும் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-14)

## திருக்குளிர்த்தி பொங்கல் விழா

கிளிநொச்சி, ஜூன் 8

இயக்கச்சி முகாவில் திரியாய் அம்மன் ஆலய வருடாந்த திருக்குளிர்த்திப் பொங்கல் விழா நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது. பகல், இரவு தொடர்ந்து விசேட அபிஷேக ஆராதனைகள் இடம்பெறுவதோடு அடியவர்களின் காவடி, பால்செம்பு, தீச்சட்டி, கரகம் பறவைக்காவடி போன்ற நேர்த்திக்கடன் நிறைவேற்றல்களும் தொடர்ந்து நீராகாரமும், மகேஸ்வர பூசையும் இடம்பெறும் என்று ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ம-14-113)



செல்வச்சந்நிதியிலிருந்து கதிர்காமம் செல்லும் பாதயாத்திரைக் குழு ஏ-9 வீதியூடாக நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை பாதயாத்திரை சென்றபோது எழுதுமட்டுவாழிலுள்ள 52 ஆவது படையணியினர் அவர்களை வரவேற்று உபசரித்து வழியனுப்பி வைத்தனர். (ய-9)



## முன்பள்ளிகளுக்கு உதவி செய்யுமாறு கல்வி அமைச்சுக்கு மனு கையளிப்பு!

சாவகச்சேரி, ஜூன் 8

வரணிப் பிரதேசத்தில் உள்ள முன்பள்ளிகளின் குறைபாடுகளை நிவர்த்தி செய்து தருமாறும் முன்பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோருக்குத் தேவையான உதவிகளை செய்துதருமாறும்கோரி வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் ஆர். வரதீஸ்வரனிடம் முன்பள்ளி ஆசிரியர்கள் மனுவொன்றைக் கையளித்துள்ளனர்.

வரணிப் பிரதேசத்தில் உள்ள சில முன்பள்ளிகளில் சரியான முறையில் அமைக்கப்பட்ட கட்டட வசதிகள் இல்லை, மாணவர்களுக்குத் தேவையான போசாக்கு உணவுகள், உள்ளக வெளியக விளையாட்டு உபகரணங்கள், கற்றலுக்குத் தேவையான உபகரணங்கள், மின்சாரம், திறன்பலகை, தொலைக்காட்சி வசதிகள் ஆகியவற்றைப் பெற்றுத்தருமாறும், முன்பள்ளி ஆசிரியர்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவை உயர்த்தும்படியும் வலியுறுத்தி மேற்படி மனு முன்பள்ளி ஆசிரியர்களால் கையளிக்கப்பட்டுள்ளது. (ம-14-159)

## அருளாசியுரையும் வேதபாராயணமும்

யாழ்ப்பாணம், ஜூன் 8

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக, நாட்டு மக்களுக்கு சுபீட்சமானதொரு வாழ்வு வேண்டி, நாளை வியாழக்கிழமை காலை 6.30 மணிக்கு வட்டுக்கோட்டை துறட்டிப்பனை அருள்மிகு முத்துமாரி அம்மன் தேவஸ்தான பிரதம குருக்கள் சிவஸ்ரீ ச.மதுசூதனக்குருக்களின் அருளாசியுரையும், வேதபாராயண நிகழ்வும் இடம்பெறவுள்ளன. (ய)

## சைவநெறிப் பரீட்சையின் பரிசில் வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூன் 8

யாழ்ப்பாணம் வில்லூன்றி வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த பெருந்திருவிழாவை முன்னிட்டு வெண்கரம் அமைப்பு நடத்திய சைவநெறிப் பரீட்சையின் பரிசளிப்பு விழா, கொட்டடி வெண்கரம் அலுவலகத்தில் கடந்த 5ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

மாணவர்களுக்கு இடையே இறை நம்பிக்கையை கட்டியெழுப்பி சைவத்துக்கும் தமிழ் மொழிக்கும் தொண்டாற்றக்கூடிய, சமயத்தில் பற்றுடைய மாணவர்களை உருவாக்கும் நோக்கத்துடன்கடந்தமே மாதம் 27ஆம் திகதி இந்தப் பரீட்சை நடைபெற்றது.

வெண்கரம் அமைப்பின் ஏற்பாட்டில், அக்கினிக் குஞ்சு அமைப்பின் அனுசரணையுடன் நடத்தப்பட்ட பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் மட்டுமன்றி ஏனையோருக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன.




வெண்கரம் பிரதான செயற்பாட்டாளர் மு.கோமகன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சமய, சமூக செயற்பாட்டாளர் கமலேஸ்வரி கனகசபை, கொட்டடி நமசிவாய வித்தியாலய ஓய்வுநிலை பிரதி அதிபர் பத்மமலர் சிவகடாட்சம், பெற்றோலியக் கூட்டுத்தாபன ஓய்வுநிலைப் பணியாளர் எஸ்.சண்முகேந்திரன், ஓய்வுநிலை ஆசிரியர் பவானிதேவி தயாபரநாதன் மற்றும் பெற்றோர், மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ம-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## மௌனித்திருப்பது ஏன்?

தற்போது கையிருப்பில் உள்ள அரிசி இரண்டு வாரங்களுக்கே போதும் என்றும், இன்னும் சில வாரங்களில் மக்கள் அரிசியை ஏற்றிச்செல்லும் வாகனங்களை இடைமறித்து வழிப்பறியில் ஈடுபடும் நிலை ஏற்படும் என்றும் அச்சமூட்டியிருக்கின்றது அரிசி ஆலைகளின் உரிமையாளர் சங்கம். அந்தச் சங்கம் இவ்வாறு எச்சரித்து வெறும் 24 மணிநேரத்துக்குள், விரைவில் அரிசியின் விலை 500 ரூபாவைத் தொடும் என்றவாறாக தன் பங்குக்கு மக்களை பதற்றத்துக்குள் தள்ளியிருக்கின்றது அநுராதபுரம் மாவட்ட நடுத்தர ஆலைகளின் உரிமையாளர் சங்கம்.

''இந்தக் கருத்துக்கள் அரசாங்கத்தின் கருத்துக்களோ அல்லது பொருளியல் நிபுணர்களின் கருத்துக்களோ அல்ல. மாறாக, ஆலை உரிமையாளர்களின் கருத்துக்களும் கணிப்புகளும்தானே'' என்று நினைத்து இந்த விடயத்தை அலட்சியமாகக் கடந்துசெல்ல முடியாது. ஏனெனில், இப்போதெல்லாம் அரசாங்கத்தின் உத்தரவுகளை விடவும் தனியார் நிறுவனங்களின் முடிவுகள்தானே வலிமையுள்ளனவாக இருக்கின்றன. விலையேற்றங்கள் முதல் எந்த விடயமாக இருந்தாலும் அரசாங்கத்தின் முடிவுகளை தனியாரின் முடிவுகள் இலகுவாக ஓரம்கட்டுவதுடன், தனியார் வைத்ததுதான் சட்டம் என்றாகிப் பல மாதங்கள். ஆதலால், அரிசி ஆலை உரிமையாளர்களின் 'பஞ்சம்' தொடர்பான இந்த எச்சரிக்கையை நின்று – நிதானித்து – சிந்திக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள் மக்கள் தள்ளப்பட்டுள்ளனர் என்பதில் இரண்டாம் கருத்தில்லை. ஏற்கனவே அரசாங்கம் அரிசிக்கு விலை நிர்ணயம் செய்ததும், பின்னர் அரிசி ஆலை உரிமையாளர்களின் எதிர்ப்புக்கு, ஆட்சியாளர்கள் பணிந்து, 'அரிசிக்கு விலைக்கட்டுப்பாடு இல்லை' என்று அறிவித்ததும் சில மாதங்களுக்கு முன்னர் நடந்திருந்தது.

அரிசி ஆலை உரிமையாளர்கள் அரிசிக்கு இரு வாரங்களில் பெரும் தட்டுப்பாடு ஏற்படுமெனச் சொன்ன கருத்துக்கள் தொடர்பாகவோ, அல்லது நாட்டில் ஏற்படலாம் என்று சொல்லப்படும் பஞ்சம் தொடர்பாகவோ அரசாங்கம் அவ்வளவு நேர்த்தியாக எந்தக் கருத்தையும் இதுவரையும் முன்வைக்கவில்லை. பொத்தாம்பொதுவான கருத்துகளும், மிரட்டல்களும்தான் அரசாங்கத் தரப்பிலிருந்து முன்வைக்கப்பட்டன – முன்வைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.


அரிசித் தட்டுப்பாடு தொடர்பில் தற்போது மக்களிடையே ஒரு பீதிநிலை ஏற்பட்டுள்ளமையை அவதானிக்க முடிகின்றது. இந்தப் பீதி நிலைதான் பதுக்கல்களுக்குக் காரணம். பற்றாக்குறை ஏற்பட்டுவிடும் என்ற பதற்றத்தில் ஒவ்வொருவரும் தத்தம் வீடுகளை சிறுசிறு அரிசிக் களஞ்சியங்களாக மாற்றுவதற்கு தற்போது தலைப்பட்டுள்ளனர். எதிர்காலத்தின் தேவைகருதி நிகழ்காலத்தில் மேற்கொள்ளப்படும் இந்த அதீத கொள்வனவுதான் அரிசித் தட்டுப்பாட்டை வலிந்து ஏற்படுத்தப் போகின்றது. உண்மையில் இந்தத் தட்டுப்பாட்டுக்குக் காரணம் அரசாங்கம்தான் – அரசாங்கம் மட்டும்தான்.

ஆலைகளின் உரிமையாளர்களுடைய கருத்துக்கள் தொடர்பில் அரசாங்கம் இதுவரை காத்திரமான எந்த விளக்கத்தையும் தரவில்லை. நாட்டிலுள்ள அரிசி இருப்பில் ஒரு தளம்பல் நிலை உள்ளமை யாவருக்கும் தெரிந்தபோதிலும், அந்தத் தளம்பல் நிலையின் தீவிரத் தன்மை தொடர்பில் அரசாங்கம் விரைந்து தெளிவுபடுத்தலை வழங்க வேண்டும். அரிசிக்கு பெரும் தட்டுப்பாடு வரத்தான் போகின்றதெனில், அதைத் தீர்க்க அரசாங்கத்திடம் இருக்கக்கூடிய திட்டங்கள் மற்றும் செயல்முறைகள் பற்றி மக்களுக்கு அவசரமாகவும் அவசியமாகவும் தற்போது தெளிவுபடுத்த வேண்டியது காலக்கடமை.

வரிகள், பொருள் விலையேற்றங்கள் என்று மக்கள் படும்பாடு போதாதென்று தனியார் மயப்பட்ட நிறுவனங்களும் தம் பங்குக்கு மக்களை பாரதூரமானதும் அச்சமூட்டக் கூடியதுமான தகவல்களாலும், எதிர்வு கூறல்களாலும் வதைத்தெறிகின்றன. பிரச்சினைகளும், சிக்கல்களும் ஒளிவுமறைவில்லாமல் மக்களுக்குப் பகிரப்பட வேண்டிய விடயம்தான். அதைவிட முக்கியமானது அந்தப் பிரச்சினைகளுக்கான தீர்வை முன்வைப்பதும் தெளிவுபடுத்துவதும். அதைச் செய்ய இலங்கை அரசாங்கத்துக்குத்தான் வக்கில்லையே.

**நாளொரு நல்வார்த்தை**

''நம்பிக்கையுடன் இருக்கும் போது எந்தக் காரியமும் கடினமாகத் தெரிவதில்லை''
- ஜோன்ரேட்




# கச்சதீவு மீட்புச் செய்திகள் உத்தியோகபூர்வத் தகவலல்ல!

## இந்தியத் துணைத்தூதுவர் தெரிவிப்பு

வவுனியா, ஜூன் 8

**கச்சதீவு மீட்பு தொடர்பாக வெளிவரும் செய்திகள் உத்தியோகபூர்வத் தகவல்கள் அல்ல என்று தெரிவித்தார் இந்தியத் துணைத்தூதுவர் ராகேஸ் நட்ராஜ்.**

இந்தியாவின் உதவித் திட்டங்களைப் பகிர்ந்தளிக்கும் நிகழ்வு வவுனியாவில் நேற்று முன்தினம் நடைபெற்றது. அந்த நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்திய மீனவர்கள் ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபடுவதற்கு கடந்த ஒன்றரை மாதங்களாக தடையுத்தரவு இருக்கின்றது. மீன்பிடி நடவடிக்கைகள் மீள ஆரம்பித்ததும் அது தொடர்பான அறிவுறுத்தல்கள் அவர்களுக்கு வழங்கப்படும். இந்திய - இலங்கை மீனவர்களின் பிரச்சினைகள் தொடர்பான பேச்சுக்கள் பல மட்டங்களிலும் இடம்பெற்று வருகின்றன.

கச்சதீவை மீட்பது தொடர்பாக வெளிவந்துள்ள தகவல்கள் உத்தியோகபூர்வமான தகவல்கள் அல்ல. இது தொடர்பான உத்தியோகபூர்வ கருத்தை இந்திய மத்திய அரசு வெளியிடவில்லை. வெளிவந்த தகவல்கள் அனைத்தும் பத்திரிகையில் வெளிவந்துள்ள செய்திகள்தான் - என்றார். (ம-110)

# கமநல சேவைகள் திணைக்களத்தால் விவசாயிகளுக்கு மண்ணெண்ணெய்

யாழ்ப்பாணம், ஜூன் 8

கமநல சேவைகள் திணைக்களத்தால் யாழ்.மாவட்ட விவசாயிகளுக்கு எரிபொருள் அட்டைகளின் அடிப்படையில் நேற்று மண்ணெண்ணெய் வழங்கப்பட்டது.

யாழ்.மாவட்ட விவசாயிகளுக்கு எரிபொருளை வழங்குவதற்கு அவர்களது பயிர்ச்செய்கை நிலங்களின் அடிப்படையில் எரிபொருள் அட்டை வழங்கப்பட்டது. குறித்த அட்டையைக் காண்பித்து யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் மண்ணெண்ணெயைப் பெற்றுக்கொள்ளமுடியும். இதற்கமைய முதற்கட்டமாக விவசாயிகளின் தேவை அளவின் 25 சதவீத மண்ணெண்ணெய் வழங்கப்படவுள்ளது.



இதேவேளை, எரிபொருள் அட்டை இல்லாத விவசாயிகள் தத்தமது பிரதேச கமநல சேவைகள் நிலையத்தில் விண்ணப்பத்தைப் பெற்றுக்கொண்டு மண்ணெண்ணெயைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-14,20)

**நாளை**
**09.06.2022**
**வியாழக்கிழமை**
**வைகாசி 26**
சுபநேரம் : 07.22 - 08.52
ராகுகாலம்: 01.22 -02.52
**உலக சமுத்திர தினம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





















பலாப்பழ சீசன் தற்போது ஆரம்பித்துள்ளதை அடுத்து தென்மராட்சியின் பல பகுதிகளில் தற்போது பலாப்பழ விற்பனை அமோகமாக இடம்பெற்று வருகின்றது. (ச-159)



# மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம், ஜூன் 8

பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரி பணி மனையால் புலோலி வடகிழக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை தொற்றா நோய்களுக்கான இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது.

இந்தப் பரிசோதனை முகாமில் தொற்றாநோய்க்கான காரணிகள் இருப்பதாக இனங்காணப்பட்டோர் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையின் சிகிச்சைகளுக்காக புரிந்துரை செய்யப்பட்டு அனுப்பப்பட்டனர். (ய- 9)

# வெளிவந்தது ஞானச்சுடர்

யாழ்ப்பாணம், ஜூன் 8

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையால் மாதந் தோறும் வெளியிடப்படும் 'ஞானச்சுடர்' நூலின் மாசி, பங்குனி மாதங்களுக்கான 290, 291 ஆவது மலர்கள் வெளிவந்துள்ளன. (ம-14)



நாட்டில் ஏற்பட்டுள்ள உணவுப் பற்றாக்குறையை எதிர்கொள்ளும் விதமாக திருகோணமலையில் உள்ள இளைஞர்களால் மரவள்ளிச் செய்கை பரவலாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. (ய-40)






வாழைச்சேனை மற்றும் புதுக்குடியிருப்பு பகுதியில் தெரிவுசெய்யப்பட்ட மக்களுக்கு தமிழ்நாட்டிலிருந்து அன்பளிப்பாக வழங்கப்பட்ட உதவிப் பொருள்கள் நேற்றுமுன்தினம் பகிர்ந்தளிக்கப்பட்டன. (ய-150)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளாதார நெருக்கடியால்



# மட்பாண்டத் தொழிலாளர் வாழ்வாதாரமும் பாதிப்பு!

மன்னார், ஜூன் 8

**மன்னார்- நானாட்டான், மடுக்கரை, செம்மண்தீவு, கறுக்காய் குளம் போன்ற பகுதிகளில் வசிக்கும் மட்பாண்ட தொழிலாளர்களின் வாழ்வாதாரம் நாட்டின் தற்போதைய பொருளாதார நலிவு நிலையாக மிகையாகப் பாதிக்கப்பட்டுள்ளது என்று மட்பாண்டத் தொழிலாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.**

இது தொடர்பில் அவர்கள் தெரிவித்ததாவது:-

எரிபொருள் தட்டுப்பாடு, எரிபொருளுக்கான விலையேற்றம் காரணமாக சட்டி, பானை, அடுப்பு, சிட்டி விளக்குகள் போன்ற பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கு முன்புபோல் வியாபாரிகள் எவரும் முன்வருவதில்லை.

இதனால் நாமே தூர பிரதேசங்களுக்கு பொருள்களைக் கொண்டுசென்று கொடுப்பதால் செலவு இரட்டிப்பாகின்றது. அவ்வாறு கொடுக்காவிடின் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் யாவும் தேங்கிக் கிடக்கும் நிலை காணப்படுகின்றது. அத்துடன் உற்பத்திச் செலவு காரணமாக பலர் இந்தத் தொழிலில் இருந்து விலகி வேறு தொழிலுக்குச் சென்றுள்ளார்கள். எங்களது காலத்தின் பின்பு தமிழர்களின் பாரம்பரிய தொழிலாகக் காணப்படும் இந்த மட்பாண்ட தொழிலைத் தொடர்ந்து செய்வதற்கு யாருமில்லை.

இந்த நிலை தொடர்ந்து ஏற்பட்டால் காலப்போக்கில் மன்னார் மாவட்டத்தில் இந்த மட்பாண்டத் தொழில் அழிந்து



போகக்கூடும். எனவே எரிபொருள்கள் உள்ளிட்ட அனைத்துப் பொருள்களும் தடையில்லாமலும் மானிய அடிப்படையிலும் கிடைத்தால் மட்டுமே எமது பாரம்பரிய தொழிலை தொடர்ச்சியாக செய்யமுடியும் -என்றனர்.

(ம-14-213)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 07 . 05 . 1956

இறப்பு 20 . 05 . 2021

### அமரர் நல்லையா மகேஸ்வரன் (துரைமணி)

நாள்கள் முன்னூற்று ஆறுபத்தைந்து கடந்ததுவோ
நீர் மண்ணுலகம் நீங்கி விண்ணுலகம் சென்று
மகனே உன் உருவம் தான் மண்ணுலகை விட்டு பிரிந்தது
ஆனால் என்றும் எம்மனங்களில் உணர்வாய் கலந்துள்ளீர்
எம் நினைவுகள் அழியும் வரை உன்னடைய நினைவுகள் எம்மை விட்டு விலகாது
எம் சுவாசக்காற்றில் நீக்கமற நிறைந்துள்ள மகனே மகேஸ்வர
நீர் என்றும் எல்லோரையும் பாசமாய் வழிநடத்துவீர்.
மகனே நீர் மலமப்பாதங்களில் பெரும் பேறு பெற்றுய்ய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

அன்னாரின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி இன்று (08.06.2022) புதன்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து 11.30 மணியளவில் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம்சாந்தி!! ஓம் சாந்தி!!!

ஈஸ்வரன் இல்லம்
ஈஞ்சாடி வைரவர் கோவிலடி,
சுதுமலை வடக்கு.

குடும்பத்தினர்


## இடிமின்னல் தாக்கியதில் மின்சாதனங்கள் சேதம்

சாவகச்சேரி, ஜூன் 8

கொடிகாமம் - பாலாவிப் பகுதியிலுள்ள வீடொன்றின் மீது இடிமின்னல் தாக்கியதில் வீட்டிலிருந்த மின்சாதனங்கள் அனைத்தும் சேதமடைந்தன.

இடிமின்னல் ஏற்பட்டவேளை வீட்டிலுள்ளவர்கள் கோயிலுக்குச் சென்றதால் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை. எனினும் வீட்டிலிருந்த தொலைக்காட்சிப் பெட்டி, குளிர்சாதனப்பெட்டி, வளிசீராக்கி, மின்விளக்குகள் உள்ளிட்ட மின்சாதனங்கள் சேதமடைந்துள்ளன. இந்த இடர் தொடர்பாக கிராம அலுவலரால் பிரதேச செயலக இடர்கால முகாமைத்துவ அலகுக்கு அறிவிக்கப்பட்டது.

(ம-14-9)

## இலங்கையில் பல இடங்களில் காற்றுடன் மழைக்கு வாய்ப்பு!

கொழும்பு, ஜூன் 8

மேல், வடமேல், சப்ரகமுவ, ஊவா மாகாணங்களிலும் கண்டி, நுவரெலியா, காலி, அம்பாறை மற்றும் மாத்தறை மாவட்டங்களில் அவ்வப்போது பலத்த காற்றுடன் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யும் என்று இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

இது தொடர்பில் அந்தத் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

மன்னாரிலிருந்து புத்தளம் வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளிலும் காலியிலிருந்து அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளிலும் காற்றின் வேகமானது 50-60 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

இதேவேளை- மன்னாரிலிருந்து புத்தளம் வரையான கடற்பரப்புகளிலும் காலியிலிருந்து அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளிலும் கடல்நிலை கொந்தளிப்பாகவும் காணப்படும்.

எனவே இதனால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களை குறைத்துக்கொள்ளத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள் -என்றுள்ளது.

(ம-14-இ)

## கள்ளுக்கு மவுசு

சாவகச்சேரி, ஜூன் 8

கள்ளுத் தவறணைகளில் கடந்த சில நாள்களாக கள்ளுக்குப் பெரும் மவுசு ஏற்பட்டுள்ளது என நுகர்வோரால் தெரிவிக்கப்படுகிறது.

நாட்டில் வரி அதிகரிப்பின் காரணமாக மதுபானங்களின் விலை உயர்த்தப்பட்டதை அடுத்தே இவ்வாறு கள்ளுக்கு மவுசு அதிகரித்துள்ளது.

தவறணைகளுக்கு அங்கத்தவர்களால் வழங்கப்படும் கள் சிறிது நேரத்திலேயே நுகர்வோரால் கொள்வனவு செய்யப்பட்டு தீர்ந்துவிடுகிறது. இதன் காரணமாக அனைத்து தவறணைகளிலும் கள்ளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

(ச-9)



## தென்மராட்சி கிராமங்களுக்கு குடிதண்ணீர் விநியோகம்

தென்மராட்சியில் குடிதண்ணீர்ப் பற்றாக்குறை நிலவும் கிராமங்கள் மற்றும் பாடசாலைகளுக்கு இன்று புதன்கிழமை தொடக்கம் குடிதண்ணீர் விநியோகிக்கப்படவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகள் இடர்கால முகாமைத்துவ திணைக்களத்தின் வறட்சிகால குடிதண்ணீர் விநியோகத் திட்டத்தின்கீழ் தென்மராட்சிப் பிரதேச செயலகத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சாவகச்சேரி நகரசபை, சாவகச்சேரி பிரதேச சபை மற்றும் நீர் வழங்கல் அதிகார சபை ஆகியவை இணைந்து தினமும் பிரதேசத்தில் வைக்கப்பட்டுள்ள 48 பொதுஇடங்களில் மற்றும் 27 பாடசாலைகளில் உள்ள நீர்த் தொட்டிகளில் சுமார் 60 ஆயிரம் லீற்றர் குடிதண்ணீரை விநியோகிக்கவுள்ளன.

அதன்படி குடிதண்ணீர் பற்றாக்குறை நிலவும் மட்டுவில் வடக்கு, மட்டுவில் கிழக்கு, சரசாலை தெற்கு, நாவற்காடு, வரணி வடக்கு, மாசேரி, இடைக்குறிச்சி, கரம்பைக்குறிச்சி, வரணி இயற்றாலை, தாவளை இயற்றாலை, மந்துவில்கிழக்கு, மந்துவில்மேற்கு, கைதடி மேற்கு, நாவற்குழிமேற்கு, நாவற்குழிகிழக்கு, கோவிலாக்கண்டி, கைதடி நாவற்குழி, தனங்கிளப்பு, மறவன்புலவு, நுணாவில் மேற்கு, கைதடி நுணாவில் ஆகிய கிராமங்களிலும் 27 பாடசாலைகளிலும் குடிதண்ணீர் விநியோகம் தினமும் இடம்பெறவுள்ளது.

(ச-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** நிதானித்துச் செயற்பட வேண்டிய நாள். மற்றவர் ஆலோசனைக்கு இடம் கொடுக்கவேண்டாம். உறவினர் எதிராகச் செயற்படுவர். முடிவுக்கு வரக்கூடிய முயற்சி கடைசி நேரத்தில் தள்ளிப்போகும்.

**இடபம்:** அடுத்தவர் பிரச்சினையில் தலையிட வேண்டாம். வழக்கில் எதிர் மறையான பயன் கிடைக்கும். வேலையில் மட்டும் கவனம் செலுத்துங்கள். உதவி செய்யும் எண்ணம் தோன்றும்.

**மிதுனம்:** பொருளாதார நெருக்கடி விலகும். பழைய கடன்கள் வசூலாகும். லாபமான நாள். எதிர்பார்த்ததை இன்று அடைவீர்கள். உங்கள் நிலையில் உயர்வு உண்டாகும்.

**கடகம்:** பணம், நகை விடயத்தில் கவனம் தேவை. இல்லையெனில் இழப்புகளைச் சந்திக்க நேரிடும். பேச்சில் கவனம் தேவை. யோசித்து செயற்பட வேண்டிய நாள். கடனில் இருந்து விடுபட முயற்சிப்பீர்கள்.

**சிம்மம்:** மனக்குழப்பம் வரலாம். எந்த ஒன்றிலும் சரியான முடிவுக்கு வரமுடியாமல் திண்டாடுவீர்கள். மனதில் புதிய எண்ணம் உருவாகி ஆசை அதிகரிக்கும். தவறான வழியில் பணம் தேட வேண்டாம்.

**கன்னி:** எதிர்பாராத பயணம் உண்டாகும். உங்களுடைய செயல்கள் விடாமுயற்சியால் நிறைவேறும். பணம் பல வழிகளிலும் செலவாகும். அத்தியாவசிய முயற்சிகளை மட்டும் இன்று மேற்கொள்ளவும்.

**துலாம்:** அடிப்படைத் தேவை இன்று நிறைவேறும். எதிர்பார்த்த வருமானம் கைக்கு வந்து சேரும். புதிய நட்புகளிடம் கவனம் தேவை. அவசரப்பட்டு யாருக்கும் எந்த உதவியும் செய்ய வேண்டாம். நெருக்கடி விலகும்.

**விருச்சிகம்:** தொழில் நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள். செல்வாக்கில் உயர்வு உண்டாகும். அமைதியுடன் செயற்பட்டு நினைத்ததை சாதிப்பீர்கள். வாழ்க்கை நிலை உயரும். நன்மை சேரும்.

**தனுசு:** மனதில் இருந்த சங்கடம் விலகும். சுறுசுறுப்பாகச் செயற்பட்டு தேவையை நிறைவேற்றுவீர்கள். உங்கள் அணுகுமுறையில் மாற்றம் உண்டாகும். எதிரிகள் பணிவர். நினைத்ததை சாதிப்பீர்கள்.

**மகரம்:** எச்சரிக்கையுடன் செயற்படுங்கள். எதிர்பார்த்த நன்மையை அடைய முடியாமல் போகும். பயணத்தில் கவனம் தேவை. மனதை பாதிக்கும் சில சம்பவங்கள் நடக்கலாம்.

**கும்பம்:** குடும்ப பிரச்சினை முடிவுக்கு வரும். கொடுத்த வாக்கை இன்று நிறைவேற்றுவீர்கள். உங்களை விட்டு விலகியவர்கள் தேடி வருவர். அடுத்தவர் நலனில் அக்கறை செலுத்துவீர்கள். செல்வாக்கு உயரும்.

**மீனம்:** உடல்நிலை சீராகும். புதிய முயற்சிகள் உங்களுக்கு முன்னேற்றத்தை உண்டாக்கும். கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள். சிலர் வெளியூர் பயணம் மேற்கொள்வர். செயல்களை கவனமாக கையாளுங்கள்.

## நம்பிக்கையில்லா வாக்கெடுப்பு
# வென்றார் போரிஸ்

லண்டன், ஜூன் 8

**பிரிட்டன் நாடாளுமன்றில் ஆளுங்கட்சி எம்.பிக்களால் அந்நாட்டு பிரதமர் போரிஸ் ஜோன்சனுக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மான வாக்கெடுப்பில் போரிஸ் ஜோன்சன் வெற்றி பெற்றுள்ளார்.**



பிரிட்டன் பிரதமராக 2019ஆம் ஆண்டு கன்சர்வேட்டிவ் கட்சியைச் சேர்ந்த போரிஸ் ஜோன்சன் பதவியேற்றார்.

கடந்த 2020ஆம் ஆண்டு பிரிட்டனில் ஏற்பட்ட கொரோனா முதல் அலையின்போது ஊரடங்குச் சட்டத்தை மீறி லண்டனின் பிரதமரின் அலுவலக இல்லத்தில் 100க்கும் மேற்பட்டோரை அழைத்து போரிஸ் ஜோன்சன் வைபவம் ஒன்றை நடத்தினார். இதற்குக் கண்டனம் எழுந்த நிலையில் தவறுக்கு போரிஸ் ஜோன்சன் மன்னிப்புக் கோரினார்.

அதேவேளை பிரிட்டன் ராணி எலிசபெத்தின் கணவர் பிலிப் கடந்த 2021 ஏப்ரலில் காலமானார். அவரது இறுதிச் சடங்கின்போது பிரதமர் அலுவலக நிர்வாகிகள் மது விருந்து நடத்தியது பேசுபொருள் ஆனது. இதனால் பிரதமர் போரிஸ் ஜோன்சன் மீண்டும் சர்ச்சையில் சிக்கினார். இதுகுறித்து லண்டன் பொலிஸார் விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பித்தனர்.

இந்த இரு விவகாரங்களை முன் வைத்து பிரதமர் போரிஸ் ஜோன்சனுக்கு எதிராக அவரது கட்சியினரே பதவி விலகும்படி வலியுறுத்தி வந்தனர்.

அத்துடன் நம்பிக்கையில்லா வாக்கெடுப்பு நடத்தவேண்டும் என கன்சர்வேட்டிவ் கட்சித் தலைமையை கோரியநிலையில் போரிஸ் ஜோன்சன் அரசுக்கு எதிராக நம்பிக்கை வாக்கெடுப்பு நடத்த உத்தரவிடப்பட்டது.

இந்தநிலையில் போரிஸ் ஜோன்சனுக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மான வாக்கெடுப்பில் 211 எம்.பிக்கள் ஆதரவாகவும், 148 பேர் எதிராகவும் வாக்களித்தனர். பெரும்பான்மை அடிப்படையில் போரிஸ் ஜோன்சன் வெற்றி பெற்றார் என இங்கிலாந்து ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (ச-இ)

## தந்தையை சுட்டுக்கொன்ற இரண்டு வயதுச் சிறுவன்
### அமெரிக்காவில் பரபரப்பு

புளோரிடா, ஜூன் 8



அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் 2 வயதுச் சிறுவன் ஒருவன் தனது தந்தையைத் தவறுதலாக சுட்டுக்கொன்ற சம்பவம் நேற்றுமுன்தினம் பதிவாகியுள்ளது.

குறித்த சிறுவன் பெற்றோர் கவனிக்காதபோது 'லோட்' செய்யப்பட்ட துப்பாக்கியை எடுத்து வைத்து விளையாடியுள்ளான்.

இந்த நிலையில் சிறுவன் துப்பாக்கியை விளையாட்டாக அழுத்தியபோது தந்தை மீது துப்பாக்கிக் குண்டு பாய்ந்துள்ளது.

உடனடியாக அவரை மீட்டு மருத்துவமனையில் சேர்த்தபோதும் அவர் உயிரிழந்துவிட்டார் என மருத்துவமனை தெரிவித்துள்ளது.

சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் 2 வயதுச் சிறுவன் தவறுதலாகத் தனது தந்தையை சுட்டுக் கொன்றமை தெரியவந்துள்ளது. இதேவேளை அமெரிக்காவில் துப்பாக்கிச்சூட்டுக் கலாசாரம் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## கீவ் மீது மீண்டும் ரஷ்யா தாக்குதல்

கீவ், ஜூன் 8

உக்ரைன் தலைநகர் கீவ் மீது ரஷ்யப் படைகள் நேற்றுமுன்தினம் ஏவுகணை வீசி தாக்குதல் நடத்தியுள்ளன.

உக்ரைன் - ரஷ்யா போர் 100 நாள்களைக் கடந்து இடம்பெற்று வருகின்றது. உக்ரைனின் பல்வேறு பகுதிகளை அடுத்தடுத்து இலக்காகக் கொண்டு ரஷ்யா தாக்குதலை நடத்தி வரும் நிலையில் தற்போது நீண்ட தூர ஏவுகணைகளை கஸ்பியன் கடலில் இருந்து கீவை நோக்கி ரஷ்யா ஏவி தாக்குதல் நடத்தியுள்ளது.

கிழக்கு ஐரோப்பிய கூட்டணி நாடுகள் உக்ரைன் படைகளுக்கு வழங்கிய பீரங்கிகளைக் குறிவைத்தே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது எனவும் இதில் உயிரிழப்பு எதுவும் இடம்பெறவில்லை எனவும் ரஷ்யா தெரிவித்துள்ளது. (ச-இ)

## 16.57 கோடி ரூபா சம்பளம்;
# அலுப்புக் குணத்தால் பணிவிலகிய இளைஞர்

பீஜிங், ஜூன் 8

நெட்பிளிக்ஸ் நிறுவனத்தில் 16.57 கோடி ரூபா சம்பளம் (450,000 அமெரிக்க டொலர்) பெற்ற சீனாவைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் பணி அலுப்படைந்துவிட்டதால் பணியிலிருந்து விலகியுள்ளார்.

சீனாவைச் சேர்ந்த மைக்கேலின் என்பவர் கடந்த 2017ஆம் ஆண்டு முதல் நெட்பிளிக்ஸில் மூத்த மென்பொருள் பொறியியலாளராக பணியாற்றி வந்தார். இவருக்கு இலங்கை மதிப்பில் 16.57 கோடி ரூபா சம்பளம் வழங்கப்பட்டது.

இந்த நிலையில் திடீரென தனது பதவியிலிருந்து விலகியுள்ளார்.

இதுகுறித்து அவர் கூறுகையில், நெட்பிளிக்ஸ் நிறுவனத்தில் 5 ஆண்டுகள் பணியாற்றிய நிலையில் வேலை அலுப்படைந்துவிட்டது. இதனால் அந்தப் பணியிலிருந்து விலகியுள்ளேன்.

இலவசமாக உணவு, அளவுக்கு அதிகமான ஊதியம், ஓய்வுநேரம் ஆகியவை கிடைத்தபோதும் வேலை அலுப்படைந்துவிட்டது- என்றார்.

இதேவேளை மைக்கேலின் நெட்பிளிக்ஸில் பணிபுரிந்த முன் அனுபவங்களை பகிர்ந்து வந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## 4 நாள்கள் வேலைத்திட்டம் பிரிட்டனில் நடைமுறை

லண்டன், ஜூன் 8



வாரத்துக்கு 4 நாள்கள் மட்டுமே வேலை என்ற திட்டம் சோதனை அடிப்படையில் பிரிட்டனில் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

70 நிறுவனங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 300 தொழிலாளர்கள் ஆறு மாதங்களுக்கு சோதனை அடிப்படையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இந்த வேலைத்திட்டத்தில் ஊழியர்களுக்கு எவ்வித சம்பளக் குறைப்பும் இடம்பெறாத வகையில் நடைமுறைப்படுத்த நிறுவனங்கள் முடிவு செய்துள்ளன.

மனஅழுத்தம், உடற்சோர்வு, அதிருப்தி உள்ளிட்டவைகளை கூடுதல் நாள் விடுமுறைமூலம் பணியாளர்கள் கையாள்வதை ஆய்வுக்குட்படுத்தி ஆராய்ச்சியாளர்கள் அறிக்கை சமர்ப்பிக்கவுள்ளனர்.

இந்த ஆய்வு வேலைத்திட்டத்தை கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம், ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் மற்றும் பாஸ்டன் கல்லூரி ஆராய்ச்சியாளர்கள் இணைந்து முன்னெடுத்துள்ளனர். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 1,500கிலோ யூரியா மாயம் விவசாயிகள் போராட்டம்!

கிளிநொச்சி, ஜூன் 8

கிளிநொச்சி அக்கராயன் குளம் கமநல சேவை நிலையத்தில் இருந்த சுமார் ஆயிரத்து 500 கிலோ யூரியா எவ்வாறு காணாமல் போனது என்று வினவி, அந்தப் பகுதி விவசாயிகள் நேற்றுப் போராட்டத்தில் ஈடு பட்டனர்.

ஆயிரத்து 500 கிலோ யூரியா எங்கே?, யூரியா இராணுவத் துக்கு வழங்கப்பட்டதா?, அதிகா ரிகளின் களவா?, எவருக்கு யூரியா கைமாற்றப்பட்டது? எங் களுக்கு சேதனம் உங்களுக்கு யூரியா சீதனமா? உள்ளிட்ட வாசகங்கள் எழுதப்பட்ட பதாகை களை ஏந்தியவாறு அவர்கள் கவனவீர்ப்பில் ஈடுபட்டனர்.

விவசாயிகளின் இந்தப் போராட் டம் தொடர்பாக, கமநல சேவை நிலைய அதிகாரிகளிடம் வினவி யபோது அவர்கள் தெரிவித்தது வது:-

30 பை யூரியா அக்கராயன் கமநல சேவை நிலையத்திலி ருந்து பரந்தன் கமநல சேவை நிலையத்துக்கு மேட்டு நிலப் பயிர்ச் செய்கையாளர்களுக்கு வழங்குவதற்கு கொண்டுசெல் லப்பட்டது - என்றனர்.

ஆனால், யூரியா கைமாற்றப்ப டுவது தொடர்பில் தமக்கு எந்த அறிவித்தலும் விடுக்கப்ப வில்லை என்று அதிகாரிகள் தெரிவித்தனர். (ம-214)

## எழுத்தாளர் ஒன்றுகூடல்

முல்லைத்தீவு, ஜூன் 8

வடக்கு மாகாண பண்பாட் லுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் புதுக்குடி யிருப்பு பிரதேச செயலகத் தால் நடத்தப்படுகின்ற புதுக் குடியிருப்புப் பிரதேச கலை ஞர், எழுத்தாளர் ஒன்றுகூடல் நிகழ்வு, எதிர்வரும் 11ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு புதுக்குடியி ருப்பு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

புதுக்குடியிருப்பு பிரதேச செய லர் சி.ஜெயகாந்த் தலைமை யில் இடம்பெறவுள்ள நிகழ் வில் புதுக்குடியிருப்பு பிரதேச கலைஞர்கள், எழுத்தாளர் கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ம-14)

## விசர்நாய் தடுப்பூசி ஏற்றல்

மந்துவில் பொதுச்சுகாதார பரிசோதகர் பிரிவில் வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த்தடுப்பூசி மருந்து இன்று புதன்கிழமை தொடக் கம் ஏற்றப்படவுள்ளது.

குறித்த பகுதியில் தடுப்பூசி ஏற்றும் நிலையங்கள் தொடர் பாக முதல் நாள் அறிவிக்கப் படும். எனவே பொதுமக்கள் அந்தந்த நிலையங்களுக்கு தமது வளர்ப்பு நாய்களை அழைத்து வந்து தடுப்பூசி பெற்றுக் கொள்ளுமாறு அதி காரிகள் அறிவுறுத்தியுள்ள னர். (ய-9)

## வருடாந்தத் திருவிழா

சாவகச்சேரி, ஜூன் 9

வரலாற்று சிறப்புமிக்க வரணி சிட்டிவேரம்கண்ணகை அம்பாள் ஆலய வருடாந்தத் திருவிழா எதிர்வரும் 13ஆம் திகதி கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறவுள்ள திருவிழாவில் எதிர் வரும் 25ஆம் திகதி சனிக்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ச-9)

# தியாகி கந்தசாமியின் போக்கு இளைஞருக்கு வழிகாட்டியது!

**1947**ஆம் ஆண்டு இலங்கை மக்களின் வரலாற்றில் முக்கியத் துவம் வாய்ந்த ஆண்டு. பிரித்தா னிய அரசிடமிருந்து இலங்கை மக்களுக்கு ஆட்சி உரிமை மாற் றப்படுவதற்கான முயற்சிகள் நடைபெற்றுக்கொண்டிருந்த காலம் அது.

பிரித்தானிய ஆட்சியாளர் தம்மீது சுமத்தப்பட்ட நிர்ப்பந்தத்தின் கார ணமாக தங்களுக்கு இலங்கையி லுள்ள பொருளாதார நலன் களுக்குப் பாதிப்பில்லாத வகை யில் மட்டுப்படுத்தப்பட்ட சுதந்தி ரத்தை வழங்க ஏற்பாடுகள் செய் தனர். இந்த அரைகுறை சுதந்தி ரம் மக்களின் முழுமையான வளர்ச்சிக்கு உதவாது என இடது சாரி அரசியல் தலைவர்களும் தொழிற்சங்க உறுப்பினர்களும் அப்போது குரல் கொடுத்தனர்.

இந்த அரசியல் பின்னணியில் இலங்கைக்கு பூரண அரசியல் சுதந்திரம்கோரி இடதுசாரிகள் போராட்டங்களை ஒன்றுதிரண்டு மேற்கொண்டனர். அன்று ஆட்சி யிலிருந்த ஐ.தே.க. அரசாங்கம் மக்கள் அலை தங்களுக்கு எதி ராக எழுவதைப் புரிந்துகொண்டு அடக்குமுறையை வலுப்படுத்தி யது. ஊர்வலங்களுக்கு தடை விதித்தது.

**உடைக்கப்பட்ட தடையும் கந்தசாமியின் கொலையும்**

சுதந்திர வேகம் கொண்ட அடக்கு முறையை ஒடுக்க நினைத்த



தொழிலாளர்கள் தடை உத்த ரவை மீறினர். 1947ஆம் ஆண்டு ஜூன் மாதம் 5ஆம் திகதி நடந்த பொது வேலை நிறுத்த் தின் ஓர் அங்கமாக தடை உத்த ரவை மீறி ஊர்வலம் நடைபெற் றது. அந்த ஊர்வலம் சென்ற டைய வேண்டிய இடத்தை சென் றடையவில்லை. ஊர்வலம் தடுத்து நிறுத்தப்பட்டது. அஹிம்சை முறையில் ஊர்வலம் தடுத்து நிறுத்தப்படவில்லை. அரச பயங் கரவாதத்தால் ஊர்வலம் தடுத்து நிறுத்தப்பட்டது. ஊர்வலத்தில் சென்ற தோழர் வே.கந்தசாமி சுட்டுக்கொல்லப்பட்டார். வேறு பலர் காயமடைந்தனர். வேலை நிறுத்தமும் முறியடிக்கப்பட்டது. வேலை நிறுத்தத்தில் பங்குபற் றிய பல ஊழியர்கள் பழிவாங்கப் பட்டார்கள்.

வேலை நிறுத்தம் முறியடிக்கப் பட்ட பொழுதும் முன்வைக்கப்பட்ட அரசியல் கோரிக்கைகள் சில வற்றை 1956ஆம் ஆண்டுக்குப் பின் பதவியேற்ற அரசாங்கம் நிறைவேற்றவே தலைப்பட்டது.

தோழர் கந்தசாமியின் அரசியல் நோக்கும், போக்கும் தமிழ் தலை வர்களின் நோக்குக்கு மாறாகவே இருந்தது. அவர்கள் கந்தசாமி யின் தியாகத்துக்கு உரிய மதிப்புக் கொடுக்கவில்லை. தமிழ் மக்க ளின் விமோசனத்துக்கு கந்தசாமி சென்ற வழி உதவாது என நம்பி னர். அதற்கமைய செயற்பட்ட னர். ஆனால், அவர்கள் சென்ற வழி தமிழ் மக்களுக்கு விமோ சனமளிக்கவில்லை.

தமிழர்களின் இன்றைய அனு பவரீதியிலான சிந்தனையும் செயற்பாடும் இற்றைக்கு நான்கு தசாப்தங்களுக்கு முன் கந்தசாமி நம்பிய, பின்பற்றிய அரசியல் சிந்தனையை நோக்கியதாக அமைந்திருந்தது என்பதே உண்மை. எனவே கந்தசாமிக்குச் செலுத்தும் அஞ்சலி வெறும் சம் பிரதாயமாக அமையாது அர்த்த புஷ்டியானதாக அமையவேண் டும்.

வட்டுக்கோட்டைத் தோழர் கந்த சாமி சென்ற வழிபற்றிய ஆய்வு நடத்தப்படவேண்டும். அவ்வா றான ஆய்வு தமிழ் மக்களுக்கு மட்டுமல்லாது முழு உலகுக்கும் பயன்படுபவையாக அமையக் கூடும். இவ்வுலகம் இருக்கும் வரை அவரை நினைவு கூரத்தக் கதாக ஓர் சிலை நிறுவப்பட வேண் டும் என்பது மக்களின் விருப்பம்.

சி.ஸ்ரீதேவா,
வலி.மேற்கு பிரதேசசபை உறுப்பினர்

## பிரதி திங்கட்கிழமைகளில் ஓய்வூதியர் குறைகேள் பணி

சாவகச்சேரி, ஜூன் 8

பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய தென் மராட்சிக் கிளையினர், தென்மராட்சிப் பிரதேச ஓய் வூதியர்களின் நலன் கருதி பிரதி திங்கட்கிழமைகளில் தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் குறைகேள் பணிகளை மேற்கொண்டுள்ளனர்.

இதற்கமைய பிரதேச ஓய்வூதியர்கள் தமது ஓய்வூதி யம் தொடர்பான பிரச்சினைகளை காலை 8 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை சங்க நிர்வா கத்தினரிடம் தெரிவித்துப் பயன்பெறலாமென பகி ரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய தென்ம ராட்சிக் கிளைத் தலைவர் செ.சுப்பிரமணியம் அறி வித்துள்ளார். (ம-14,9)

## ஓய்வூதியர்களும் தற்போது கட்டாயம் வீட்டுத்தோட்டத்தில் ஈடுபடவேண்டும்

சாவகச்சேரி, ஜூன் 8

நாட்டில் ஏற்பட்டுள்ள உணவுப் பற்றாக்குறையைப் போக்க ஓய்வூதியர்கள் தமது காணியில் உள்ள சிறிய இடப்பரப்பில் வீட்டுத்தோட்டத்தில் ஈடுபட வேண்டும் என்று ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய தென்மராட்சி கிளையின் தலைவர் செ.சுப்பிரமணியம் தெரிவித் துள்ளார்.

பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய தென் மராட்சி கிளையின் வருடாந்த பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ் வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாம் ஒவ்வொருவரும் ஓய்வுபெற்ற பின்னர் வீடுகளில் எமது பொழுதைப்போக்கி வருகின்றோம். எமது உண வுக்கும் தேவையான உணவு வகைகளை சந்தையி லும் வர்த்தக நிலையங்களிலும் பெற்று ஓய்வூதிய தொகைக்கு அளவாக வாழ்ந்து வருகின்றோம். ஓய்வு காலத்தில் எமக்கு நிறைய உடற்பயிற்சி தேவைப்படுகி றது. உடற்பயிற்சிக்காக தினமும் நடைப்பயிற்சி மேற் கொள்கின்றோம். எனவே, எமது உடலுக்குப் பயிற்சி யாகவும், பொருளாதாரத்தை மேம்படுத்தும் வகையி லும் எமது காணியின் சிறிய இடப்பரப்பில் மரக்கறி வகைகளை நட்டுப் பராமரித்து வந்தால் எமக்கு போதிய உடற்பயிற்சி கிடைப்பதுடன் போசாக்கான மரக்கறி வகைகளை உற்பத்தி செய்து உண்ண முடியும் -என் றார். (ய-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெருக்கடிகளுக்குத் தீர்வை எட்ட தூதரங்களுடன் கலந்துரையாடல்

**கொழும்பு, ஜீன் 8**

**நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிகள் தொடர்பாகக் கலந்துரையாடி, வெளிநாடுகளிலுள்ள தூதரகங்களின் மூலமாகத் தீர்வுகளை நாடும் வகையில், வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, வெளிவிவகார செயலாளர் அருணி விஜேவர்தன மற்றும் அனைத்து வெளிநாட்டு தூதரகங்களின் தலைவர்களுக்கிடையில் விசேட கலந்துரையாடலொன்று இடம்பெற்றுள்ளது.**

அதில் அமைச்சர் பீரிஸ், இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடி மற்றும் அரசாங்கம் எதிர்கொள்ளும் சிரமங்களை எடுத்துரைத்ததுடன், முதலீடுகள், வர்த்தகம் மற்றும் சுற்றுலாவை ஊக்குவிப்பதற்கான விரிவான பணிகளுக்கு முன்னு ரிமை அளிக்கும் வகையில் அனைத்து வெளிநாட்டுத் தூதரகங்களின தும் பிரதான செயற்பாடுகள் பொருளாதார இராஜதந்திரத்தை ஊக்குவிப்பதாக அமைய வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளார்.

மத்திய வங்கி ஆளுநர் கருத்து வெளியிடுகையில், பொருளாதார இராஜதந்திரத்தை மேம்படுத்துவதற்கான முன்னோக்கிச் செல்லும் வழிகள் மற்றும் வெளிநாட்டுத் தூதரகங்கள் இது தொடர்பான தமது முயற்சிகளை தொடர்ந்து ஊக்குவிக்கக்கூடிய பகுதிகள் தொடர்பாக விரிவாக விளக்கினார்.

வெளிநாட்டு தூதரகங்களால் முன்மொழியப்பட்ட பொருளாதார இராஜதந்திர முயற்சிகள் குறித்து மத்திய வங்கி, நிதி அமைச்சு மற்றும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சு ஆகியவற்றுக்கு இடையே ஒரு உரையாடலை உருவாக்குவதற்கு இன்றைய கலந்துரையாடல் முயற்சி அமைச்சால் முன்னெடுக்கப்பட்டுள் ளது என்று வெளிவிவகார செயலாளர் தெரிவித்தார்.

வெளிநாட்டுத் தூதரகங்கள் பொருளாதார இராஜதந்திரத்தை மேம்படுத்துவதற்கு எடுத்துள்ள அனைத்து முயற்சிகளையும் நடவடிக்கைகளையும் பாராட்டிய அமைச்சர் பீரிஸ், இலங்கை மத்திய வங்கிக்கும் நிதியமைச்சுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைக்கு அமைச்சு தொடர்ந்தும் உதவும் என்றும் தெரிவித்தார்.

(எ-இ)

# ஸ்கந்தாவின் ஆண்டு நிறைவு விழா நேற்றுச் சிறப்புற நடந்தேறியது



யாழ்ப்பாணம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் 128 ஆவது ஆண்டு நிறைவு விழா நேற்றுத் திங்கட் கிழமை காலை 8.30 மணிக்கு கல்லூரி அதிபர் மு.செல்வஸ்தான் தலைமையில் நடைபெற்றது.

இறை வணக்கம், பாடசாலைக் கொடியேற்றல் என்பன இடம்பெற்றதைத் தொடர்ந்து ஸ்கந்தா நிதியப் பெயர்ப் பலகையை யாழ். ஸ்கந்தவரோதயக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் அமெரிக்கா கிளைத் தலைவரும், ஸ்கந்தா நிதிய உறுப்பினருமான கே.பாலசுப்பிரமணியம் திரைநீக்கம் செய்தார்.

ஸ்கந்தா நிதியத்தால் அமைக்கப்பட்ட திறன் வகுப்பறைப் பெயர்ப் பலகையை ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் யாழ்ப்பாணத்துக்கான பழைய மாணவர் சங்கத்தின் தலைவர் சேது விபுலானந்தா திரைநீக்கம் செய்தார். ஸ்கந்தா நிதியத் தலைவர் மருத்துவர் கே.சிவகுமார் திறன் வகுப்பறைச் செயற்பாடுகளைச் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்தார். இதன்போது மாணவர்களின் பயன்பாட்டிற்கு என ஒருதொகுதிக் கதிரைகளும் கையளிக்கப்பட்டன.

தொடர்ந்து இடம்பெற்ற விழா நிகழ்வில் கல்லூரியின் 128 ஆவது ஆண்டு நிறைவு விழாவை கல்லூரியின் அதிபர், மாணவர்கள், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள் ஆகியோர் இணைந்து கேக் வெட்டிக் கொண்டாடினர்.

நிகழ்வில் ஸ்கந்தா நிதியத்தின் கனடாக் கிளைப் பணிப்பாளர் கே.மகேந் திரலிங்கம், யாழ்.ஸ்கந்தவரோதயக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் அமெரிக்கா கிளைத் தலைவரும், ஸ்கந்தா நிதிய உறுப்பினருமான கே.பாலசுப்பிரமணியம் ஆகியோர் கல்லூரி வளர்ச்சிக்கு ஆற்றி வரும் அரும்பெரும் சேவைகளைப் பாராட்டிக் கல்லூரிச் சமூகத்தால் விசேடமாகக் கௌரவிக்கப்பட்டனர்.

(எ-இ)

## இனந்தெரியாதோரால்...

வீட்டுக்குச் சென்ற இருவர், இவரை வீட்டுக்கு வெளியே அழைத்துத் தாக்குதல் நடத்தினர் என்று கூறப்படுகின்றது. தலையில் படுகாயமடைந்த இவர் நிலத்தில் வீழ்ந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பாக முல்லைத்தீவுப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதை அடுத்து, சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

நீதிவான் முன்னிலையில் உடல் மீட்கப்பட்டு, உடற்கூற்றுப் பரிசோதனைக்காக முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டது.

சம்பவம் நடைபெற்றபோது வீட்டில் உயிரிழந்தவரின் தந்தை மட்டுமே இருந்தார் என்றும், அவரிடம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது என்று தெரிவித்த பொலிஸார் இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் தெரிவித்தனர்.

(அ-எ-19)

# ரணிலுக்குப் பிரதமர் பதவி கிடைத்தது என்னால்தான்!

நாடாளுமன்றில் பொன்சேகா சுட்டிக்காட்டு

பிரதமர் பதவியை ஏற்க வேண்டும் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச என்னிடம் கோரிக்கை விடுத்தார். நான் அதை ஏற்கவில்லை. அதனால்தான் ரணில் விக்கிரமசிங்கவுக்கு பிரதமர் ஆகும் வாய்ப்பு கிட்டியது. என்னால்தான், உங்களுக்கு பிரதமர் கதிரை கிடைத்தது என்பதை மறந்து விட வேண்டாம் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, கிண்டல் பாணியில் என்னைப் பற்றியும் கருத்து வெளியிட்டிருந்தார். அரசியல் வாய்ப்பை அவரே வழங்கினார் என்று கூறினார். ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, உங்களை (ரணில்) அழைப்பதற்கு மூன்று மணித்தியாலங்களுக்கு முன்னர் என்னை அழைத்து பேச்சு நடத்தினார். பிரதமர் பதவியை ஏற்கவேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார். நான் 4 நிபந்தனைகளை முன்வைத்தேன். எனது கட்சியின் பெரும்பான்மை அனுமதி கிடைத்தால் மாத்திரம் அதைச் செய்வேன் என்று கூறியிருந்தேன். இதனால்தான் ரணிலுக்கு வாய்ப்பு கிடைத்தது - என்றார். (எ-44)

## மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 31 . 07 . 1958 | 06 . 06 . 2022 |

### ஆசைப்பிள்ளை சகாயரட்ணராசா (ராதா)

சக்கோட்டை அல்வாய் வடமேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ராதா என்று அழைக்கப்படும் ஆசைப்பிள்ளை சகாயரட்ணராசா அவர்கள் நேற்று முன்தினம் (06.06.2022) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆசைப்பிள்ளை அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை எலிசபெத் தம்பதியரின் அன்பு மருமகனும், இராசரத்தினத்தின் அன்பு மைத்துனரும், செபமாலை அம்மாவின் அன்புச் சகோதரரும், சத்தியவதியின் பாசமிகு கணவரும், ஐக்குலின் காலஞ்சென்ற ஜான்சன் மற்றும் குயின்ரன், நிரோஜன், நிரஞ்சன், நிஸாந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சத்தியமுகுந்தன், அனுஷா, ஜேன் பவித்திரா, ஜோதிகா, குகாசினி ஆகியோரின் அன்பு மாமனாரும், வசீகரன் ஆரூரன், அருவி, காருண்யா, கவின்யா, பாரினியன், மித்ரன், நீர்ஜா, ஸாகித்யா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க நிகழ்வு இன்று (08.06.2022) புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பூதவுடல் அவரது இல்லத்திலிருந்து சக்கோட்டை புனித சவேரியார் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பழைய வேதக் கோவிலடி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சக்கோட்டை, அல்வாய் வடமேற்கு.
076 733 5866 (CR 8535)1-6

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



### ஸ்ரீகாந்தராசா புனிதவதி

தோற்றம் 23.08.1961 மறைவு 07.06.2022

மன்னார் பரப்புக்கடந்தானை பிறப்பிடமாகவும் உரும்பிராயை வசிப்பிடமாகவும் மல்லாகத்தை தற்போதைய முகவரியாகவும் கொண்ட ஸ்ரீகாந்தராசா புனிதவதி நேற்று 07.06.2022 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் பொன்னுத்துரை (காலஞ்சென்ற) அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மகளும் செல்லத்துரை (காலஞ்சென்ற) கமலாவதி ஆகியோரின் அன்பு மருமகளும் ஸ்ரீகாந்தராசாவின் அன்பு மனைவியும் ஸ்ரீரங்கராணி, லோகேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் லதுசயன், ஜனுஜன், துஸ்யந்தன், அனுசன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் கமலாவதி, நாகஜீவா (அமரர்) உதயகுமார், நாகநாதன், நாகதேவா ஆகியோரின் அன்புச் சகோதரியும் மகேந்திரராசா,சுபாசினி, அர்ச்சயதேவி, செல்வதர்சினி ஆகியோரின் மைத்துனியும் லோகாநந்தன், பிரசாந்தினி, நிசாந்தினி, நிதுசாந்தினி ஆகியோரின் பெரிய தாயாரும் லதா, கிருசாந்தன், நிருசாந்தன், மதீசன், கோபிசன், திறநாளன், பாவாளன், கஜநேயன் ஆகியோரின் மாமியாரும் பிரகவி, வருண் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.06.2022) புதன்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் (மல்லாகம்) நடைபெற்று தகனக்கிரியைக்காக எழாலை உசத்தியோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் இந்திராணி மாணிக்கலிங்கம்

திதி:- 08.06.2022

தோற்றம் 30.09.1950 — மறைவு 20.05.2021

ஓராண்டு நீங்கினாலும் எம்மை விட்டு
நீங்காது உங்கள் நினைவு என்றும்.


என்றும் உங்கள்
நினைவுகளுடன்

566/3, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

தெ.பேசி இல
021 222 5800 குடும்பத்தினர்.

# 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய நிகழ்வும் நன்றி நவிலலும்

தோற்றம் 14 . 11 . 1945



மறைவு 09 . 05 . 2022

கடந்த 09.05.2022 அன்று காலஞ்சென்ற எமது குடும்பத் தலைவர்
கலாபூஷணம், கலைச்சாகரம், யாழ் முத்து

## அமரர் பொன்னையா இராசகுலசிங்கம்

(Artist தேவர், ஓய்வுபெற்ற ஆசிரியர், நவீல்ட் பாடசாலை, கைதடி)

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு அனுதாபம் தெரிவித்த உறவினர்கள், நண்பர்கள் அயலவர்களுக்கு மனமார்ந்த நன்றியை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

இன்று (08.06.2022) புதன்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

"கலை அன்பகம்" கண்டி வீதி,
மீசாலை கிழக்கு, மீசாலை.

குடும்பத்தினர்.

(CR 8537) 1-6

# மரண அறிவித்தல்

மலர்வு 06 - 02 - 1932



உதிர்வு 04 - 06 - 2022

## திருமதி பொன்னுத்துரை மரியம்மா

ஒட்டகப்புலத்தினை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தினை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பொன்னுத்துரை மரியம்மா அவர்கள் 04.06.2022 சனிக்கிழமையன்று இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தாவீதுப்பிள்ளை பொன்னுத்துரையின் பாசமிகு மனைவியும் சாள்ஸ் பத்திநாதர், அல்பிறட் கருணைநாதன், மேரி றோஸ் விமலாவதி, மேரி றோஸ் இலங்காவதி, மேரி றோஸ் இந்திராவதி (France) மற்றும் காலஞ்சென்ற ஜேம்ஸ் அரியநாதன் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதி வழிபாடுகள் இல.243, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இன்று (08.06.2022) புதன்கிழமை நடைபெற்று பி.ப 2.00 மணியளவில் ஒட்டகப்புலம் அமல உற்பவ அன்னை ஆலயத்திற்கு அவரது பூதவுடல் எடுத்துச்செல்லப்பட்டு பி.ப 3.00 மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படுவதுடன் அச்சுவேலி புனித சூசையப்பர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
076 259 2615, 021 222 3302

# வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை -மானிப்பாய்

## பெறுகை அறிவித்தல்

### வெளிவாரி அடிப்படையிலான பாதுகாப்புச்சேவை வழங்கலுக்கான விலைமனுக் கோரல் - 2022 / 2023

தலைவர், பெறுகைக்குழு அவர்களினால் வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபையில் 2022ம் ஆண்டுக்கான பாதுகாப்புச் சேவை வழங்குவதற்கு தகைமையுள்ள சேவை வழங்குநர்களிடமிருந்து பொறியிடப்பட்ட பெறுகை மனுப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| பெறுகை இல | சேவை | எதிர்பார்க்கப்படும் / தேவையான ஆளணி எண்ணிக்கை |
|---|---|---|
| NP/14/41(16)/1/OS/01 | பாதுகாப்புச் சேவை | 03 |

1) சேவை வழங்குநர்கள் பாதுகாப்புச் சேவை வழங்கலுக்கான வியாபாரப்பதிவுடைய ஒரு நபராகவோ அல்லது ஒரு நிறுவனமாகவோ இருத்தல் வேண்டும் என்பதுடன் குறைந்தது 2 ஆண்டுகள் இச்சேவையை வழங்கியதற்கான அனுபவம் இருத்தல் வேண்டும்.

2) சேவை வழங்குநர்களின் தலைமைக் காரியாலயம் அல்லது கிளைக் காரியாலயம் யாழ் மாவட்டத்தில் அமைந்திருத்தல் வேண்டும்.

3) சேவை வழங்குநர்கள் பெறுகை ஆவணங்களை வலிகாமம் தென்மேற்கு பிரதேச-சபை, மானிப்பாயில் அமைந்துள்ள தலைமை அலுவலகத்தில் 08.06.2022 ஆம் திகதி தொடக்கம் 21.06.2022 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணிமுதல் பி.ப 02.30 மணிவரை மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூபா 1000.00 ஐச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

4) பெறுகை ஆவணங்கள் 21.06.2022ம் திகதி பி.ப 02.30 மணிக்கு முன்பதாகக் கிடைக்கக் கூடியவாறு "தவிசாளர், வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்" என்னும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது பதிவுத் தபாலிலோ அனுப்பிவைத்தல் வேண்டும். பெறுகைப் பத்திரங்கள் அனைத்தும் பெறுகைநேர முடிவில் உடனடியாகத் திறக்கப்படும். இதில் பெறுகைதாரரோ அல்லது அவரால் எழுத்துமூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவரோ கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர்.

5) கிடைக்கப்பெற்ற பெறுகைகளை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ நிராகரிப்பதற்கும் மீள் பெறுகை கோரலைக் கோருவதற்கும் பெறுகைக் குழுவிற்கு அதிகாரம் உள்ளது.

அ.ஜெபநேசன்
தவிசாளர்
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை
மானிப்பாய்

(CS 36091) (3/6)

# மரண அறிவித்தல்



## பிரம்மஸ்ரீ சிவகடாட்ச சர்மா

(ஓய்வு பெற்ற தொலைத்தொடர்பு பரிசோதகர்)

யாழ்ப்பாணம் கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட பிரம்மஸ்ரீ சிவகடாட்ச சர்மா (ஓய்வு பெற்ற தொலைத்தொடர்பு பரிசோதகர்) அவர்கள் நேற்று முன்தினம் (06.06.2022) திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கொக்குவில் சிவஸ்ரீ சோமசுந்தரஐயர் நாகரத்தின அம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கல்வளை சிவஸ்ரீ விஸ்வநாதக்குருக்கள் அன்னரத்தினஅம்மா தம்பதியரின் மருமகனும், சர்வேஸ்வரியின் (லீலா) அன்புக் கணவரும், சிவசுதனின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு நாளை (09.06.2022) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் கிரியைகள் ஆரம்பித்து பிற்பகல் 5.30 மணிக்கு கல்கிசை பொது மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவருக்கும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளிற்கு
071 624 3835

தகவல் :
குடும்பத்தினர்

(CS 45102) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17 ஈழத்தமிழர்களும்

# மருத்துவமனையிலும் உணவு தவிர்ப்பு!

சென்னை, ஜூன் 8

தமிழ்நாடு - திருச்சி தடுப்பு முகாமில் அடைத்துவைக்கப்பட்டுள்ள தம்மை விடுவிக்க வேண்டும் என்று வலியுறுத்தி, உணவு தவிர்ப்பில் ஈடுபட்டுவந்த 17 ஈழத்தமிழர்களும், உடல்நிலை மோசமடைந்ததை அடுத்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ள போதிலும், அவர்கள் தமது போராட்டத்தைக் கைவிடவில்லை. நேற்று 19ஆவது நாளாக அவர்கள் தமது போராட்டத்தைத் தொடர்ந்தனர்.

திருச்சி தமிழ்நாடு சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 17 இலங்கைத் தமிழர்கள், தங்களை விடுதலை செய்யக்கோரி இரண்டு வாரங்களுக்கும் மேலாக உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள்.

தண்ணீரை மட்டும் அருந்தி போராட்டத்தில் ஈடுபட்டுள்ள அவர்கள், தங்களை விடுவிக்காவிட்டால் கருணைக் கொலை செய்ய வேண்டும் என்றும் தங்களுடைய உடல் உறுப்புகளை தமிழ்நாட்டு மக்களுக்கு தானம் செய்ய வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

உணவு தவிர்ப்பில் ஈடுபட்டவர்களின் உடல்நிலை மோசமடைந்ததை அடுத்து அவர்கள் திருச்சி மருத்துவமனையில் நேற்றுமுன்தினம் சேர்க்கப்பட்டனர்.

மருத்துவமனையில் அவர்களுக்குச் சிகிச்சை வழங்கப்படுகின்ற போதிலும் அவர்கள் தமது போராட்டத்தைக் கைவிடவில்லை. மருத்துவர்கள் போராட்டத்தைக் கைவிடும்படி கோரியுள்ள போதிலும் குறித்த 17 ஈழத் தமிழர்களும் திட்டவட்டமாக மறுத்துவிட்டனர் என்று தெரியவருகின்றது.

(ம-20,60,56)


## கண்ணீர் அஞ்சலி



எமது அலுவலகத்தில் கடமையாற்றும் திருமதி மலர்மதி அவர்களின் அன்புத் தந்தை

**அமரர் வல்லிபுரம் தம்பிஜயா**

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக இறைவனை வேண்டுகின்றோம்.

ஊழியார் நலன்பரிச் சாங்கம்,
வலிகாமம் தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.

(CR 36092) (3/6)

## திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்
### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

**வியாபார முகாமைத்துவமாணி பட்டப்படிப்பு 2020/2021**
**புதிய அனுமதிக்கான தெரிவுப் பரீட்சை - 2022 (12ம் பிரிவு)**

மேற்படி குறித்த பட்டப்படிப்பிற்கு விண்ணப்பித்த விண்ணப்பதாரிகளுக்கான தெரிவுப்பரீட்சையானது எதிர்வரும் 18.06.2022 (சனிக்கிழமை) மதியம் 02.00 மணி தொடக்கம் 03.30 மணி வரை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் பூர்த்தியாகியுள்ளன.

பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் தபாலில் அனுப்பி வைக்கப் பட்டுள்ளன. அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாதோர் 15.06.2022 (புதன் கிழமை) மற்றும் 16.06.2022 (வியாழக்கிழமை) ஆகிய நாட்களில் அலுவலக நேரத்தில் (காலை 08.30 மணி தொடக்கம் மாலை 04.15 மணி வரை) நேரடியாகவோ அல்லது தொலைபேசி மூலமாகவோ (021-222-3612) தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

07.06.2022 (CS 36094) (3/6)

## மரண அறிவித்தல்



**பாலசுப்பிரமணியம் சதீஸ்**
(யாழ் ஈச்சமோட்டை, பிரான்ஸ்)

தோற்றம் 22.04.1979 — மறைவு 25.04.2022

யாழ் ஈச்சமோட்டையைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸ் Drancy யை வசிப்பிடமாகவும் கொண்ட பாலசுப்பிரமணியம் சதீஸ் அவர்கள் கடந்த (25.04.2022) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் பாலசுப்பிரமணியம் காலஞ்சென்ற செல்வ ராணி (ரதி) தம்பதிகளின் பாசமிகு மகனும், அக்ஷயாவின் ஆருயிர் தந்தையும், சகிலா, சத்தியா ஆகியோரின் அன்பு சகோதரனும், ஜெனா (பிரான்ஸ்) ரஜனிகாந் ஆகியோரின் அன்பு மைத்துனரும், சஞ்ஜனா, றித்தீஸ், அனன்னியா ஆகியோரின் ஆசை மாமாவும் ஆவார்.

அன்னாரின் இறதிக்கிரியைகள் இன்று (08.06.2022) புதன்கிழமை முற்பகல் 9.00 மணி முதல் 11.30 மணி வரை LeFunerariun 95 rue, Marcel Sembat 93430 Villetaneuse என்னும் இடத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் இறுதிக்கிரியைகள் நடைபெற்று மதியம் 12.30 மணிக்கு பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

076 003 4783 -சகோதரி,
077 524 3849 -தந்தை

தகவல்:
குடும்பத்தினர்

(CS 1154) (3/6)

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 09.05.2022 திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

அமரர்
**சின்னராசா மகேந்திரராஜா**

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (08.06.2022) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சைவப்பாடசாலை வீதி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில். குடும்பத்தினர்.

## UNIVERSITY OF JAFFNA
## INVITATION FOR BID

The Chairman, Procurement Committee of University of Jaffna invites sealed bids from eligible and qualified bidders for the following work.

| No | Bid ID | Description of Work | Estimated Cost (Rs. In million) excluding VAT | Construction Period (No of Calendar Days) | Minimum Required CIDA Grade | Required Bid Security Amount |
|---|---|---|---|---|---|---|
| 1 | YA/CWP/KKT F/C1/2022/05 | Refurbishment of Library Block at University of Jaffna | 26.3 | 150 | C5 or C4 | Rs. 270,000.00 |

1. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.
2. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of Building Construction with the Institute for Construction Industry Development Authority (CIDA) as indicated in the above table.
3. Interested bidders may obtain further information from Assistant Registrar, Capital Works & Planning Branch, University of Jaffna and inspect the bidding documents at the same address on any working day from 9:00hrs to 16:00hrs. Contact numbers are: Phone: 021 2219201 Fax: 021 221 9201.
4. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on submission of a written application to the Assistant Registrar, Capital Works & Planning Branch, University of Jaffna, Thirunelvely, Jaffna from 7th June 2022 until 29th June 2022 from 9:00 hrs to 15:00 hrs and upon payment of a non-refundable fee of Rupees Five Thousand (Rs. 5,000.00) to be deposited to the People's Bank, University of Jaffna with the Reference No "970000060000276" should be filled in the Account Number column in the Deposit Slip.
5. Sealed Bids shall be delivered or sent by registered post to the Assistant Registrar, Capital Works & Planning Branch, University of Jaffna, Thirunelvely, Jaffna P.O Box 57 or be deposited in the tender box kept in the Capital Works & Planning Branch to reach on or before 10.00 hrs on 30th June 2022. Bids will be opened soon after closing, at 10.00 hrs on 30th June 2022 at the same venue in the presence of the bidders' representatives who choose to attend.
6. Bids shall be valid at least for a period of 90 Days from the closing date of Bids submission or any extended date.
7. All Bids shall be accompanied by a Bid Security which shall be;
   - In the form included in the Section 09 in the Bidding document.
   - In favour of "Vice Chancellor, University of Jaffna."
   - For the amount indicated in the above table.
   - Bid Security shall be valid upto 28.10.2022
   - Issued by one of the agencies indicated in the clause 16.0 of the Section 5
8. Pre Bid meeting will be held on 21st June, 2022 at 10.00 hrs at Capital Works & Planning Branch, University of Jaffna, Thirunelvely, Jaffna.

Chairman,
Department Procurement Committee,
University of Jaffna,

07/06/2022 (CR 36089) (3/6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மிகக் கடினமான...

முன்வைத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நாடு பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடைந்துள்ள நிலையில், எதிர்வரும் மாதங்களில் உணவு நெருக்கடி நிலைமைகள் ஏற்படக் கூடும். இந்த நிலைமையைத் தடுத்து நிறுத்துவதற்காகப் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

**அற்புதங்கள் நடக்காது**

பாரம்பரிய அரசியல் சித்தாந்தங்களை குறுகிய காலத்துக்கு ஒதுக்கி வைத்துவிட்டு நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான கூட்டு முயற்சியை மேற்கொள்ள வேண்டும். அந்த முயற்சியில் முழு நாட்டு மக்களும் பங்குதாரர்களாக இருக்க வேண்டும். நாட்டுக்காக நாம் அனைவரும் ஆற்ற வேண்டிய பங்கு உள்ளது.

எங்களது முதன்மையான கவனம் பொருளாதார ஸ்திரத்தன்மையில் உள்ளது. ஆனால், பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதன் மூலம் மட்டும் நாம் இந்நிலையிலிருந்து மீள முடியாது. நம் நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுக்க வேண்டும்.

இது இரண்டு மூன்று நாள்களில் செய்து முடிக்கும் காரியம் அல்ல. இந்தச் சவாலை அற்புதங்களால் செய்துவிட முடியாது. கோஷங்களிலிருந்து அல்ல, மந்திரத்தால் அல்ல, உணர்ச்சிகளால் அல்ல, புத்திசாலித்தனமாக சிந்திக்கப்பட்ட திட்டங்களை செயற்படுத்த கடின உழைப்பு மற்றும் அர்ப்பணிப்பு அவசியம்.

**எரிபொருள் நெருக்கடி**

ஒரு மாதத்துக்கு 500 மில்லியன் டொலரை எரிபொருளுக்காக நாடு செலவிடுகின்றது. தற்போதைய நெருக்கடியால் எண்ணெய் விலை உயரும் அபாயம் உள்ளது என்பதை மனதில்கொள்ள வேண்டும். இந்த ஆண்டு இறுதிக்குள் உலக மசகு எண்ணெய் விலை 40 வீதம்வரை உயரும் என்று சிலர் மதிப்பிட்டுள்ளனர்.

இந்தப் பின்னணியில் எரிபொருளுக்கான கூப்பன் முறையை அறிமுகப்படுத்தும் யோசனையை நிராகரிக்க முடியாது. எப்படியாவது அடுத்த ஆறு மாதங்களுக்கு 3 ஆயிரத்து 300 மில்லியன் டொலர் எரிபொருளைத் தேடிக் கொள்ளவேண்டும்.

எரிவாயு இறக்குமதி செய்ய ஒரு மாதத்துக்கு 40 மில்லியன் அமெரிக்க டொலர் செலவாகும். நாங்கள் தற்போது எரிவாயு இறக்குமதி செய்ய பலதரப்பு உதவி, உள்ளூர் நாணயம் மற்றும் இந்திய கடன்களைப் பயன்படுத்துகின்றோம். அடுத்த ஆறு மாதங்களுக்கு எரிவாயுவுக்கு 250 மில்லியன் அமெரிக்க டொலர் தேவைப்படுகின்றது.

**கடினமான 3 வாரம்**

அடுத்த மூன்று வாரங்கள் எரிபொருளுக்குக் கடினமான காலமாக இருக்கும். நாம் அனைவரும் எரிபொருள் மற்றும் எரிவாயுவை முடிந்தவரை கவனமாக உபயோகப்படுத்த வேண்டிய நேரம் இது. பயணங்களை முடிந்தவரை மட்டுப்படுத்தப்படவேண்டும். எனவே இந்தக் காலகட்டத்தில் தேவையில்லாமல் சிந்திப்பதையும் தேவையில்லாமல் எரிபொருள் மற்றும் எரிவாயுவைப் பதுக்குவதையும் தவிர்க்க வேண்டும் என்று அனைத்து குடிமக்களையும் கேட்டுக் கொள்கின்றேன்.

அந்தக் கடினமான மூன்று வாரங்களுக்குப்பிறகு, எரிபொருள் மற்றும் உணவை சிரமமின்றி வழங்க நாங்கள் முயற்சி செய்கின்றோம். பல்வேறு தரப்பினருடன் பேச்சு நடத்தப்பட்டு வருகின்றது. அந்தக் கடினமான மூன்று வாரங்களுக்குப் பின்னர், எரிபொருள் மற்றும் எரிவாயுவைத் தட்டுப்பாடு இல்லாமல் வழங்க நாங்கள் முயற்சி செய்கின்றோம். இந்தக் கடினமான மூன்று வாரங்களைப் பொறுமையாக எதிர்கொள்வோம்.

**உணவு நெருக்கடி**

சில மாதங்களில் உணவு விடயத்தில் கடும் சிரமங்களை சந்திக்க வேண்டியிருக்கும். அழிந்து வரும் விவசாயத்தை மீண்டும் கட்டியெழுப்பும் பணியை உடனடியாகத் தொடங்க வேண்டும். நமது ஏற்றுமதிப் பயிர்களுக்கு சர்வதேச சந்தையை இழந்து வருகின்றோம். இதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். உள்ளூர் விவசாயத்தை உயர்த்த இரசாயன உரங்கள் தேவை. ஒரு பயிரின் ஆரம்பம் முதல் இறுதிவரை அவ்வப்போது உரம் இட வேண்டியிருப்பதால், இந்த உரத்தைத் தட்டுப்பாடு இல்லாமல் இறக்குமதி செய்யவேண்டும்.

**டொலர் பற்றாக்குறை**

அடுத்த ஆறு மாதங்களில் நம் வாழ்க்கையைச் சாதாரணமாக வைத்திருக்க 5 பில்லியன் டொலர் தேவை. மக்களின் அன்றாட வாழ்க்கைக்கு இணையாக ரூபாவைப் பலப்படுத்த வேண்டும். ரூபாவை வலுப்படுத்த இன்னும் 5 பில்லியன் டொலர் தேவை. அதாவது அடுத்த ஆறு மாதங்களுக்கு நாட்டை மிதக்க வைக்க 6 பில்லியன் டொலரை நாம் கண்டுபிடிக்க வேண்டும். இத்தனைக்கும் மத்தியில் சராசரி தேசிய உற்பத்தியை உயர்த்துவதற்கான திட்டங்களை உருவாக்கவேண்டும். அந்த திட்டங்களைச் செயற்படுத்தவேண்டும்.

தற்போது சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சு நடத்தி வருகின்றோம். எங்களுடைய எதிர்காலப் பொருளாதாரத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு நாங்கள் விவாதித்தோம். 2023ஆம் ஆண்டு அனைத்து சவால்களையும் எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

**வெளிநாட்டு உறவு**

நமது வெளிநாட்டு உறவுகளைக் கூர்ந்து கவனிக்கவேண்டும். சர்வதேச ஆதரவை அதிகரிக்கவேண்டும். சில தவறான செயல்களால் உலகில் ஓரங்கட்டப்பட்ட நாடாக மாறி வருகின்றோம். அந்த நிலையை மாற்றுவது எளிதல்ல. ஆனால், நாம் அதை எப்படியாவது செய்ய வேண்டும். இலங்கைக்குப் புதிய பொருளாதாரத்தை உருவாக்குவதே எமது இறுதி இலக்கு. சுதந்திரத்தின் நூற்றாண்டு விழாவான 2048 ஆம் ஆண்டளவில் இலங்கையை அபிவிருத்தியடைந்த நாடாக மாற்றுவதே இலக்காகும். அனைத்து வேறுபாடுகளையும் ஒதுக்கி வைத்துவிட்டு, நாட்டுக்காகப் புதிதாகச் சிந்திப்போம். புதிய பயணத்தைத் தொடங்குவோம். தேவையான அரசமைப்பு சீர்திருத்தங்களைத் தொடங்குவோம். வித்தியாசமாகச் சிந்திப்போம். நாம் அனைவரும் வித்தியாசமாகச் சிந்தித்து வித்தியாசமாகச் செயற்படுவதன் மூலம் அமைப்பை மாற்ற ஆரம்பிக்கலாம் - என்றார். (அ-எ-22)

## வீடு உடைத்துத்...

திரனியல்உபகரணங்கள் திருடப்பட்டன. இந்தச் சம்பவம் தொடாபில் மானிப்பாய பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இது தொடர்பாக யாழ்ப்பாணம் பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவின் மானிப்பாய் பொலிஸ் நிலைய உத்தியோகத்தரால் முன்னெடுக்கப்பட்ட விசாரணையின் அடிப்படையில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மானிப்பாயைச் சேர்ந்த 24 வயதுடைய இளைஞர் ஒருவரே கைது செய்யப்பட்டார். சந்தேக நபரால் வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையில் திருடப்பட்ட மின் உபகரணங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். விசாரணைகளின் பின்னர் சந்தேக நபர் மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (அ-எ-26)

## லிட்ரோ...

இடைநிறுத்தியுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமைக்குப் பின்னர் லிட்ரோ நிறுவனம் எரிவாயு விநியோகத்தை சந்தைக்கு மேற்கொள்ளவில்லை. இன்று முதல் எரிவாயு சிலிண்டர் விநியோகம் ஆரம்பிக்கப்படும் என்று அறிவித்திருந்தது.

ஆயினும், இன்னும் சில தினங்களுக்கு எரிவாயு சிலிண்டர் விநியோகம் நடைபெறாது என்று தற்போது லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது.

அதேவேளை, நாட்டில் எரிவாயு சிலிண்டருக்குத் தொடர்ந்தும் தட்டுப்பாடு காணப்படுகின்றது. எரிவாயு நிறுவனங்கள் குறைந்தளவிலான எரிவாயு சிலிண்டர்களையே சந்தைக்கு விநியோகிப்ப தால் மக்கள் அவற்றைப் பெறமுடியாததால், எரிவாயு சிலிண்டருக்காக நாடு முழுவதும் மக்கள் நீண்ட வரிசைகளில் காத்திருக்க வேண்டிய நிலைமையே தற்போதும் காணப்படுகின்றது. (அ-எ-இ)

## இன்னும் சில...

இலங்கையில் வருமானம் குறைந்துள்ளமை மற்றும் உணவுப் பொருள்களின் விலையேற்றம் என்பன போதிய அளவு உணவு உட்கொள்வதில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன என்று உலக உணவு பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதிகரித்து வரும் உணவுப் பொருள்களுக்கான செலவுகள், எண்ணெய் மற்றும் இறக்குமதிப் பொருள்களின் விநியோக நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளமை, நாணய மாற்று விகிதத்தில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி என்பவற்றால் 2022 ஆம் ஆண்டில் இலங்கையில் பணவீக்கம் இன்னும் அதிகரித்துச் செல்லும் என்றும் அந்த அறிக்கையில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் காரணங்களால் ஜூன் தொடக்கம் செப்ரெம்பர் காலப்பகுதிக்குள் இலங்கையில் உணவுக்கான பற்றாக்குறை ஏற்படும் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நாட்டுக்கு அதிக வருமானத்தைப் பெற்றுக்கொடுக்கும் பெரும்போகத்தில் எதிர்பார்க்கப்பட்ட அறுவடையானது, சாதாரண எதிர்பார்ப்பை விடவும் குறைந்துள்ளது. 2021 ஏப்ரல் மற்றும் நவம்பர் மாத காலப்பகுதிகளுக்குள் இரசாயனப் பசளை மற்றும் களை நாசினிகளுக்கு தடை விதிக்கப்பட்டமையே இதற்கான பிரதான காரணம் என்று அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தநிலையில், உலக உணவுத் திட்டமும் ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பு என்பனவும் இலங்கையின் உணவுப் பாதுகாப்பு நெருக்கடியைத் தீர்ப்பதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் பரிந்துரைத்துள்ளன.

இரசாயன மற்றும் சேதனப் பசளைக்கான நிதியுதவியை சர்வதேசத்திடமிருந்து உடனடியாகப் பெற்றுக்கொள்ளல், கால்நடைத் துறையும் நலிவடைந்து வருவதால், அதிக ஊட்டச்சத்துள்ள கால்நடைத் தீவனம் மற்றும் மருந்துகளை இறக்குமதி செய்து கால்நடை வளர்ப்பை வலுப்படுத்துதல், இடைப் போகத்தில் குறுகிய காலச் செய்கையாக பாசிப் பயறு செய்கையை ஊக்குவித்தல் மற்றும் விவசாயிகளுக்குத் தேவையான நிதியை நிபந்தனையின்றி வழங்குதல், நெல் சேமிப்பு மற்றும் அதனுடன் தொடர்புடைய உட்கட்டமைப்பை மேம்படுத்த நடவடிக்கை எடுப்பதன் மூலம் தினக்கூலி பெறுவோருக்கு ஒத்துழைப்பு வழங்குதல், உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் நிலைமையை தொடர்ந்து கண்காணிப்பதற்கும் ஒரு பணியகத்தை நிறுவுதல் என்பனவே அந்தப் பரிந்துரைகள் ஆகும்.

ஜூலை மாதத்தில் இலங்கையின் நிலைமை தொடர்பாக மதிப்பீடு செய்யப்படவுள்ளது என்றும் உலக உணவுத் திட்டமும் ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பும் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ-இ)

## கிளி.ம.வியில்...

மாணவர்கள் பாதிப்புக்குள்ளாகி மருத்துவனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களில் 11 பேர் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டனர் என்று மருத்துவமனைத் தகவல்கள் தெரிவித்தன.

இந்தச் சம்பவம் நேற்று பிற்பகல் 1.30 மணியளவில், பாடசாலை முடிவடையும் தறுவாயில் நடந்துள்ளது. அங்குள்ள குளவிக் கூடு ஒன்றைக் குரங்குகள் கலைத்ததை அடுத்து, குளவிகள் ஆக்ரோஷத்துடன் மாணவர்களைத் தாக்கத் தொடங்கியுள்ளன. பாடசாலை முடிவடையும் நேரம் என்பதால் அதிகளவான மாணவர்கள் குளவிக் கொட்டுக்கு இலக்காகியுள்ளனர். குளவிக் கொட்டுக்கு இலக்கான சில மாணவர்கள் மயங் கியதால் அங்கு பதற்ற நிலைமை ஏற்பட்டது. பாதிக்கப்பட்ட 25 மாணவர்கள் கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில், அவர்களில் 11 பேர் அவசர சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

குளவிகள் கலைந்து தாக்கத் தொடங்கியதும் பாடசாலையில் அபாய சமிக்ஞை ஒலி எழுப்பப்பட்டுள்ளது. பாடசாலையின் மூன்று வாயில்களில் இரு வாயில்கள் மட்டுமே திறக்கப்பட்டிருந்ததால் மாணவர்கள் உடனடியாக வெளியேற முடியாத நிலைமை காணப்பட்டது என்றும் கூறப்படுகின்றது. (அ-எ-14-214)

## கடன்...

2021ஆம் ஆண்டு திறைசேரி கேள்விப் பத்திரம் வெளியிடுவதற்காக நாடாளுமன்றத்தால் இறுதியாக அனுமதி வழங்கப்பட்ட கடன் எல்லை 3 ஆயிரம் பில்லியன் ரூபாவாகவும், 2022 ஏப்ரல் மாதம் இறுதிப் பகுதியில் செலுத்த வேண்டிய முழு திறைசேரி கேள்விப் பத்திரங்களின் பெறுமதி 2 ஆயிரத்து 860 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது.

நாட்டின் கடன் நிலையை கீழ் நிலைக்கு தரப்படுத்தியதைத் தொடர்ந்து சர்வதேச சந்தைக்கான பிரவேசம் மட்டுப்படுத்தப்பட்டது. அதனால் தேசிய மட்டத்தில் உள்ள நிதி நிறுவனங்களில் கடன் பெற வேண்டிய நிலை நிதியமைச்சுக்கு ஏற்பட்டுள்ளது. (அ-எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளியற் கல்லூரி

நாவலர் வீதி, யாழ்ப்பாணம். K.K.S வீதி, சுன்னாகம்.

**BARATHY** சித்தன் கேணி

எமது மூன்று நிறுவனங்களிலும்

## A/L 2024
## கலை, வர்த்தகம்

ஆரம்பம் :- 11.06.2022 (சனி)

எமது மூன்று நிறுவனங்களிலும் வட புலத்தின் பிரபல்யம் பெற்ற ஆசிரியர்கள் ஒன்றிணைந்து கற்பிக்கின்றனர்.

- பொருளியல் - R.தர்ஷன்
- கணக்கீடு - S.திருக்குமரன்
- வணிகக்கல்வி - S.பிரதீபன்
- தமிழ் - N.சத்தியவேந்தன்
- இந்து நாகரிகம், இந்து சமயம் - P.ஜோதீஸ்வரன், A.மேனன்
- புவியியல் - P.S.குமரன்
- அளவையியல் - S.சயந்தன், N.ஜெயசுரேஸ், S. பவன்
- வரலாறு - K.சுதன்
- அரசியல் - S.கோகுலன்
- ஊடகவியல் - N.கஜிதரன்
- விவசாயம் - S. சிவசஜீவன்
- நாடகம் - T. ஜெயசுதன்
- கிறிஸ்.நாகரிகம் - A. யூபின்சன்
- சித்திரம் - S.சபேசன்
- சங்கீதம் - S.குமுதினி
- மனைப்பொருளியல் - K.றஜிதா
- ICT - T.சுதர்ஷன், T.தேவதர்ஷன், N.VITHOO
- ஆங்கிலம் - Y.துஷ்யந்தன், S.K. ஜெனகன்

கற்பித்தல் காலம் போதாமையினால் தாமதியாது உங்களது அனுமதிகளை விரைவில் பெற்றுக்கொள்ளவும்.

அலுவலக நேரம்
- யாழ் நகரில் 8.00 AM - 12.30 PM
- சுன்னாகத்தில் 3.30 PM - 5.30 PM
- சித்தன்கேணியில் 3.30 PM - 5.30 PM

மேலதிக விபரங்களுக்கு
**077 376 3511**



# விஸ்டம் தொழில் நுட்பக் கல்லூரி

இல.63, சிவன் வடக்கு வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

யாழ் நகரின் அனுபவமும் தேர்ச்சியும் மிக்க முன்னணி ஆசிரியர்களின் வழிகாட்டலில் புதிய கல்வியாண்டு

**A/L 2024** ஆரம்பம் 12 2022 ஆனி ஞாயிறு AM- 09.01

- தொழினுட்பப் பிரிவு
- வர்த்தகப் பிரிவு
- கலைப் பிரிவு

இன்றிலிருந்து புதிய அனுமதிகளை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

077 248 7774 / 076 552 9093



# TECHNO WORLD
## தொழில்நுட்பக் கல்லூரி

வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்

**A/L 2024 தொழில்நுட்ப பிரிவு**

- பொறியியல் தொழில்நுட்பவியல்.
- உயிர்முறைமைகள் தொழில்நுட்பவியல்.
- தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம்.
- I.C.T, விவசாயம், புவியியல், ஊடகக் கல்வி, கணிதம் (7), சித்திரம்.

திகதி : 12.06.2022 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : காலை 9.00 a.m. (CR 36090)(3.6)

Call Now: **077 017 5346**



# வேலையாட்கள் தேவை

மானிப்பாயில் இயங்கும் உணவகம் ஒன்றிற்கு ரொட்டி ,றைஸ் வேலை. தெரிந்தவர்கள் உடனடியாக வேண்டும் & உதவியாளர்களும் தேவை.

077 203 0625



# ALLIANCE FRANCAISE DE JAFFNA
## af பிரெஞ்சு மொழி

- யாழ்ப்பாணத்தில் French Embassy கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் Alliance Francaise மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட Certificates International Diplomas (delf)
- தமிழ் மொழிமூலம் பிரஞ்சு நாட்டு ஆசிரியரினாலும் கற்பிக்கப்படும்
- French Embassy இன் அனுமதியுடன் திருமண அத்தாட்சிப் பத்திரங்கள் தமிழ் மொழி மூலம் மொழி பெயர்ப்புச் செய்து கொடுக்கப்படும். (இங்கே மட்டும்).



021 222 8093 17, Kandy Road, Jaffna



# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் நாவற்குழி சந்தியில் 4 பரப்பு காணி விற்பனைக்குண்டு**

நிலப்பரப்பு
- A 32, A9 இணையும் பிரதான வீதியில் (றவுண்டப் வோட்)
- A9 பிரதான வீதியில் இருந்து 18அடி பாதையுடன்
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்று சூழல்
- வீடுகள் கட்டுவதற்கு உகந்த இடம்.

பார்வையிடும் நேரம் : காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை
தரகர் தேவையில்லை
தொடர்புகளுக்கு: ஜெயம்
077 814 7389, 077 241 7589



# காணி விற்பனைக்கு

தாவடி வடக்கில் அமைந்துள்ள குளி 15.7 விஸ்தீரணம் உடைய காணி விற்பனைக்குண்டு (CS 45100)(3/6)

077 657 8392, 077 148 0229



# திருமாங்கல்யம் திருமண சேவை

1980 - 1990 இல் பிறந்த படித்த தனியார் தொழில் புரியும் மணமகள்கள் தேவை.
செவ்வாய் தோஷம் உடைய மணமகள் தேவை

thirumaangalyam.com
077 120 4651, 021 728 4433



# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவற்குழி சந்திக்கு அருகாமையில் A9 வீதி முகப்புடன் 15 பரப்புக்காணி விற்பனைக்கு.
நிலப்பரப்பு.




- 3 பரப்பாகவும், 2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் A9 வீதி முகப்புடன் வாகனங்கள் தரித்து நிற்பதற்குரிய பாரிய இடவசதி வீதியுடன் அமைந்துள்ளது.
- வியாபார நிலையங்கள், மண்டபங்கள், வீடுகள் அமைப்பதற்கு உகந்த நல்ல தண்ணீர் மேட்டுக் காணி.
- நாவற்குழி சந்தியிலிருந்து கைதடி செல்லும் வீதி முகப்புடன் லங்கா அசோக் லேடன் வாகன காட்சியறை நேரெதிரே அமைந்துள்ளது.
- பார்வையிடும் நேரம் : காலை 8.00 - மாலை 6.00 மணிவரை.

077 62 34 204
077 28 80 152
(1153 6)1-6


# மரண அறிவித்தல்

பிறப்பு 28 . 11 . 1995 இறப்பு 06 . 06 . 2022



## அமரர் பரராஜசிங்கம் ஜிந்துஜன்

டயலொக் (கிளப் விஷன் பணியாளர் -கொழும்பு)

விடத்தற்பளையை பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட பரராஜசிங்கம் ஜிந்துஜன் அவர்கள் 06.06.2022 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் பரராஜசிங்கம் மதிவதனி ஆகியோரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சின்னத்தம்பி நாகம்மா செல்வரத்தினம் காலஞ்சென்ற லீலாவதி ஆகியோரின் பேரனும் மதியழகன், மதிரூபன், செல்வலீலன், மயூரன் (உப தவிசாளர் சாவகச்சேரி பிரதேச சபை), இராசலட்சுமி சிவஞானம், ஜெயலட்சுமி காலஞ்சென்றவர்களான மதிவதனன், மதிசீலன் ஆகியோரின் மருமகனும் மதிறஜனி, நிஷாந்தினி, துரைராஜசிங்கம், குலபாலசிங்கம் ஆகியோரின் பெறாமகனும் மதிஷா, ரக்ஷா, ஜெனி, நேகா, தரணி, நிரு, ரமியா, கேஷன், டர்சிகா, சர்மிலன், சர்மி, டனு, ஜீவா, ஜீவநந்தினி, தமிழினி, யாழினி, அமுதினி, லக்சுமன், கஜீவன் ஆகியோரின் மைத்துனரும் சுஜீவன், சுஜிந்தன், அஸ்வின், அஸ்வியா, சஸ்மியா, டனுஷன் ஆகியோரின் உடன் பிறவா சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் விடத்தற்பளையில் உள்ள அன்னாரது இல்லத்தில் இன்று 08.06.2022 நடைபெற்று மதியம் 1.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக விடத்தற்பளை சம்பாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மயூரன் (மாமா) (சாவகச்சேரி பிரதேச சபை, உப தவிசாளர்) - 077 358 1007
மதியழகன் - 076 214 1886
[illegible] - 076 657 1402

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org